# வரலாற்றில்
# வளவனூர்

லட்சுமி மூர்த்தி, பி.ஏ.,

# வரலாற்றில் வளவனூர்

(கோயில் கலை விளக்கம்)

லட்சுமி மூர்த்தி, பி.ஏ.,

சேகர் பதிப்பகம்
(தொலைபேசி, 48 34 325)
66/1, பெரியார் தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை-600 078.

முதல் வெளியீடு : டிசம்பர், 1992
மறுபதிப்பு : ஆகஸ்ட் 1994
உரிமை : பதிப்பகத்திற்கு

விலை ரூ. 24.

அச்சும் அமைப்பும்

அமுதன் அச்சகம்
66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர்.நகர்,
சென்னை - 600 078 போன்: 4834325

## நூல் உருவாக்கியோர்


| | |
|---|---|
| ஆசியர் | லட்சுமி மூர்த்தி, பி. ஏ., |
| ஓவியம் | ஆர். சதானந்தம் |
| உருவச்சு | அண்ணாமலை |
| முகப்பு அச்சிட்டோர் | செ. அன்பு<br>அன்பு அச்சகம் |
| அச்சுக்கோப்பு | து. முருகன், அ. சுந்தரி, சே. விஜயா<br>நா. மணிமேகலை, எ. ஷர்மிளா |
| அச்சிட்டவர் | இரா. திருஞானம் |
| உதவி | சீனிவாசன் |
| பிழை திருத்தம் | வெள்ளையாம்பட்டு சுந்தரம் |
| கட்டுக் கோப்பு | வி. எம். பைண்டிங் |
| அச்சகத்தார் | சு. அருள், சு. புகழேந்தி,<br>அமுதன் அச்சகம் |

படங்கள் பக். 73—84

படங்கள் பக். 101—104

பதிப்பகம்

# அணிந்துரை

**திரு. வீ. சங்கரன், I. A. S. (ஓய்வு)**

6. A. டி/ஸில்வா ரோடு
சென்னை-4

நாள் 13. 12. 92

சிற்றூர்கள்தோறும் சிறு தெய்வங்கள், பெருந் தெய்வங்கள் மக்கள் வழிபாட்டில் இருந்து வருகின்றன. விழுப்புரத்தை அடுத்த புரௌடதேச மகாராஜபுரம் என்னும் வளவனூரில் பல கோயில்கள், காலம் காலமாக இருந்து வருகின்றன.

குறிப்பாக, ஸ்ரீ ஜகந்நாத ஈஸ்வரர் கோயிலும் லட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலும் பெருமளவு மக்கள் வணக்கத்திற்கு உரியதாக இருந்து வருகின்றன. இக் கோயில்கள் சோழர் காலம் முதலே மன்னர்களால் போற்றப்பட்டு வந்துள்ளன. இராசேந்திர சோழன், குலோத்துங்க சோழன் முதலானோர் இக் கோயில்களுக்குப் பல தர்ம சாசனங்களைத் தந்துள்ளனர். இதனை இப்பொழுதும் சிதைந்து காணப்படுகின்ற கல்லெழுத்துச் சாசனங்களில் இருந்து தெரிந்துகொள்கிறோம். கி. பி. 11- 12 ஆம் நூற்றாண்டிலிருந்து 16 ஆம் நூற்றாண்டு வரை வேறு இடங்களில் இப் பழங் கோயில்கள் இருந்திருக்கின்றன. இஸ்லாமியரின் படை எடுப்பால்

சிதையுண்டு சீரழிந்து இருக்கின்றன. பிறகு செஞ்சி நாயக்கரின் கீழ் இப்பகுதியை ஆண்ட பாளையக்காரத் தலைவனால் இப்பொழுது உள்ள இடத்தில் இக் கோயில்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.

அழிந்த பழங் கோயில்களின் கட்டடப் பொருள்களை யும் சாசனங்களையும் இப் புதிய கோயில்களில் ஆங் காங்கே அமைத்து நிறுவியுள்ளனர்.

அதற்குப் பிறகு கிழக்கிந்தியக் கும்பனியாரின் தொடர்பு ஏற்பட்ட காலத்தில் இக்கோயில்களுக்கு உரிய நிலங்களை வரையறுத்து வைத்துள்ளனர். அதுமுதல் வளவனூர் அக்ரஹாரத்தைச் சேர்ந்த மஹாஜனங்களால் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது. இன்றும் பல திருவிழாக்களோடு மக்கள் வழிபடும் இவ் விரு கோயில் களும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன் பழம் பெருமையைக் கல்வெட்டுச் சான்று களோடு அறிந்து கொள்ள விரும்பிய இவ்வூர் ஜி. வி. இராமசாமி அய்யர் அவர்கள் முயன்றார்கள். அம் முயற்சியின் பலனாக, இந்நூல் ஆசிரியை திருமதி. **லட்சுமி மூர்த்தி**, பி. ஏ. அவர்கள் கல்வெட்டுத் துறையைச் சார்ந்த தம் கணவருடன்பலமுறைவந்து பெரு முயற்சியுடன் ஆய்வு செய்து நல்லமுறையில் இந்நூலை உருவாக்கியுள்ளார்கள். இதற்காக வளவனூர் மஹாஜனங்கள் இத் தம்பதியருக்கு மிகவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள்.

இந்நூலை எழுதிய திருமதி லட்சுமி மூர்த்தியையும் அழகாக வெளியிட்ட பதிப்பகத்தார் திரு வெள்ளையாம் பட்டு **சுந்தரம்** அவர்களையும் எல்லோரும் வாழ்த்துவர். வளவனூர் மக்களும் தங்கள் பழம் பெருமை மிக்க இக்

கோயில்களின் வரலாற்றை இந்நூலின் மூலம் நன்கு அறிந்து பெருமைப்படலாம்.

தம் ஊர் வரலாறான இந்நூலை நமது இளந்தலை முறையினர் வீட்டுக்கு ஒன்றாக வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அண்டை அயலில் உள்ள மற்ற ஊராருக்கும் இதனைத் தெரிவித்து ஆங்காங்கே உள்ள வரலாற்றுச் செய்திகளையும் வெளிப்படுத்த வேண்டுகிறேன்.

அருகிலுள்ள மற்ற பல கோயில்களின் வரலாற்றையும் ஆய்வு செய்ய இந்நூல் ஒரு தூண்டுதலாக அமையும் என நம்புகிறேன்.

அன்புடன்
**வி. சங்கரன்**



அஸ்திர தேவர் செப்புத் திருமேனி

# முன்னுரை

வளவனூர்க் கோயிலை நான் சென்று பார்த்த பொழுது அதன் வரலாற்றுப் பின்னணி, என்னை அதைப்பற்றி அறியும் ஆவலைத் தூண்டியது.

அதே சமயம் வளவனூர் திரு.ஜி.வி.இராமசாமி அய்யர் அவர்கள் இங்குள்ள சிவன், பெருமாள் கோயில்கள் பற்றி ஆய்வு செய்து எழுதித் தருமாறு ஊக்கப்படுத்தினார்கள். அடிக்கடி சென்றபோதெல்லாம் வசதி செய்து தந்தார்கள். அவர்களுக்கும் சிவன் கோயில் தர்மகர்த்தா திரு. எஸ். ரெங்கநாத அய்யர் அவர்களுக்கும் சிவன்கோயில் அர்ச்சகர் சுப்பிரமணிய பரமாச்சாரியர் பெருமாள் கோயில் அர்ச்சகர் ந. கிருஷ்ணமூர்த்தி பட்டச்சாரியார் அவர்களுக்கும் நன்றி உடையேன்.

கல்வெட்டுத் துறையில் உள்ள என் கணவருடைய ஒத்துழைப்பும் வழிகாட்டுதலும் சேர்ந்ததால்இந்நூல் உருவாயிற்று. கல்வெட்டுகளைப் படி எடுத்தும் படித்தும் உதவி செய்த திரு. வெ. இராமமூர்த்தி எம். ஏ.,பி.எல்., திருமதி. ஆ. பத்மாவதி எம்.ஏ., ஆகிய இருவருக்கும் என் நன்றி உரியது.

வரலாற்றுத் துறையில் பயின்ற எனக்கு இவ் வரலாற்று நூலை எழுத நேர்ந்ததைப் பொருத்த மாகவும் நற்பேறாகவும் கருதுகின்றேன்.

வளமிக்க வளவனூர் மக்கள் தங்கள் ஊர்த்திருக் கோயில்களின் பழம்பெருமையை அறிந்துபெருமைப் படலாம்.

இந்நூல் விரைவில் உருவாக உதவிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை-28
13-12-92

அன்புடன்
லட்சுமி மூர்த்தி

# பொருளடக்கம்

| | |
|---|---|
| முன்னோட்டம் | 9 |
| ஜகந்நாத ஈசுவரர் திருக்கோயில் | 19 |
| சிவன் கோயில் அமைப்பு | 20 |
| விமானம் | 22 |
| அர்த்த மண்டபம் | 24 |
| மகா மண்டபம் | 25 |
| நடராஜர் சபை | 26 |
| அபிராமி அம்மன் கோயில் | 27 |
| முகமண்டபம் | 36 |
| முருகப் பெருமான் சன்னதி | 38 |
| பரிவார ஆலயங்கள் | 40 |
| சிற்பக்கலை அறிமுகம் | 43 |
| செப்புத் திருமேனிகள் | 50 |
| செஞ்சிநாயக்கர் காலம் | 50 |
| பிற்காலம் | 51 |
| பிரதோஷ நாயகர் | 52 |

| | |
|---|---|
| பிரதோஷநாயகர் அம்மன் | 54 |
| மாணிக்கவாசகர் | ,, |
| சுந்தரமூர்த்தி நாயனார் | 55 |
| நடராஜர் | 56 |
| சிவகாமி அம்மன் | 57 |
| அய்யனார் | 58 |
| பூரணி | 60 |
| புஷ்கலை | 61 |
| ஸ்கந்தர் | 62 |
| சண்டிகேஸ்வரர் | 63 |
| அஸ்திர தேவர் | ,, |
| பராசக்தி | 64 |
| சந்திரசேகரர் அம்மன் | 65 |
| விநாயகர் | ,, |
| சோமாஸ்கந்தர் | 66 |
| பிரியாவிடை | 67 |
| தனி அம்மன் | 68 |
| மாரியம்மன் | 69 |
| சூரியன் வழிபடும் கோயில் | 70 |
| ஆடிப் பூர விழா | 72 |
| படங்கள் 73-84 | |
| கல்வெட்டுச் செய்திகள் | 89 |
| திருக்கோயில் நிருவாகம் | 95 |

## லட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்


| | |
|---|---|
| கோயில் அமைப்பு | 97 |
| உண்ணாழி | 98 |
| அர்த்தமண்டபம் | 99 |
| மகாமண்டபம் | ,, |
| முக மண்டபம் | 100 |
| படங்கள் 101 - 104 | |
| தாயார் சன்னதி | 105 |
| வைணவ துர்க்கை | 106 |
| திருமால் | 107 |
| விகனசர் சன்னதி | 108 |
| அனுமன் சன்னதி | 109 |
| விமானம் | ,, |
| வாகன மண்டபம் | 110 |
| செப்புத் திருமேனிகள் | 111 |
| செல்வர் | 112 |
| திருமால் | 113 |
| திருமகள் | 115 |
| நிலமகள் | 116 |
| வெண்ணெய்க் கண்ணன் | 117 |
| விஷ்ணு | 119 |
| ஸ்ரீதேவி | 120 |
| பூதேவி | ,, |

| | |
|---|---|
| வேதவல்லித் தாயார் | 120 |
| இராமர் குழு | 121 |
| இலக்குவன் | ,, |
| சீதா பிராட்டி | 122 |
| ஆண்டாள் | ,, |
| விகனசர் ஆச்சாரியார் | 123 |
| மூலமடை அய்யனார் கோயில் | 124 |



அய்யனார் தேவி பூரணி
பழமையான செப்புத் திருமேனி

## படையல்

சோழநாட்டில் தோன்றி
சோழர் வரலாறு தந்த
கல்வெட்டு அறிஞர்
***திரு தி. வை. சதாசிவப் பண்டாரத்தார்***
நூற்றாண்டு நினைவுக்கு.

# வரலாற்றில் வளவனூர்

## முன்னோட்டம்!

சோழ வளநாட்டின் ஒருபகுதி நடுநாடு என்பர். அரசியல் மாற்றங்களில் நாட்டுப் பகுதிகளின் பெயர்களும் மாறி வருவதை வரலாறு காட்டுகிறது.

விழுப்புரம் அடுத்துள்ள பகுதியை விழுப்பரையர் நாடு என்று ஒரு காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. திருமுனைப்பாடிநாடு என்றும் ஒருபோது அழைக்கப்பட்டுள்ளது.

சோழப் பேரரசிற்கும், பாண்டியர் ஆட்சிக்கும், சிற்றரசர் பலரது ஆட்சிக்கும் உட்பட்டிருந்த ஒரு பகுதியாக இன்றைய விழுப்புரம் வட்டம் இருந்திருக்கிறது என்பதைத் தமிழக வரலாற்றுக் குறிப்புகள் உணர்த்துகின்றன.

சங்ககாலச் சோழரும் பல்லவரும் ஆண்டபின், மாமன்னன் இராஜராஜ சோழனும் அவன்மகன் இராஜேந்திர சோழனும் அவனுக்குப் பின்னர்

வந்தோரும் ஆண்டுவந்த தமிழகத்தின் நடுப்பகுதியாகத் திக்ழ்வது விழுப்புரத்தைச் சுற்றியுள்ள பகுதி. உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகிலுள்ள சேந்தமங்கலத்தில் இருந்து சிறப்புற ஆண்ட சிற்றரசனான காடவர் குலக் காவலன் கோப்பெருஞ்சிங்கன் முதல், விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரின் ஆட்சியும் தொடர்ந்துள்ள நீண்ட வரலாற்றின் நிலைக்களமாய் அமைந்த ஒரு பகுதியாகவே விழுப்புரம் வட்டத்துப் பெருநிலம் திகழ்ந்திருக்கின்றது.

பிற்காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள், போர்த்துகீசியர் மட்டும் இங்கு எட்டிப் பிடித்துத் தொட்டு ஆளமுடியால் விட்டு விலகியுள்ளனர்.

முஸ்லீம்களின் ஆட்சியிலும், இடையே மராட்டிய சிவாஜியின் ஆட்சியிலுங்கூடச் செஞ்சி, திண்டிவனம், விழுப்புரம் சார்ந்த பகுதிகள் சிறப்புற்று இருந்துள்ளன.

சமண, பௌத்த சமயம் முதல் சைவ, வைணவத் தாக்கமும் இங்கே கால் கொண்டிருந்திருக்கிறது.

சமணச் சான்றோராகத் திகழ்ந்தவர், திருநாவுக்கரசராக மாறி, அப்பரடிகளாக உயர்ந்த சைவப் பெரியார் தோன்றியதும் இப் பகுதியில் தான்.

திருவாமூரும், மணம் தவிர்ந்த புத்தூரான (அரசூர் அடுத்த) மணப் புத்தூரும், திருப்பாதிரிப் புலியூரும், திருவதிகைத் திருநகரும் அப்பரடிகளின்

ஒப்பற்ற வாழ்க்கையில் இணைந்த திருவிடங்கள் அல்லவா?

திருநாவலூரும் திருவெண்ணெய் நல்லூரும் சூழ்ந்த பகுதிகளில் சுந்தரமூர்த்தி நாயனாரின் மந்திரப் பாடல்கள் இசைத்த காலத்தை மறக்க முடியுமா?

சின்னஞ்சிறு பாலகனாக இருந்து சிவிகை ஏறித் தாளம் இசைத்துத் தேவாரம் பாடியவாறு சீர்காழியிலிருந்து புறப்பட்டுச் சைவ சமயத்தைப் பரப்பிய திருஞான சம்பந்தரின் பாடல் பெற்ற ஊர்கள் பல இப் பகுதியிலும் உள்ளதை யார் மறுக்க முடியும்?

இங்கிலாந்திலிருந்து வந்த இராபர்ட் கிளைவும் பிரெஞ்சு நாட்டு டியூப்ளேவும்கூட நடமாடிப் பழகிய வளமான பகுதியுள் விழுப்புரம் பகுதியும் விடுபட்டதில்லை.

பிரெஞ்சுக்காரர்களின் கப்பல் துறைமுகமாகப் புதிதாய்ப் பிறந்த புதுச்சேரி என்னும் சிற்றூரை, நகரமாக வளர்த்துச் சிறப்பிக்க வந்த, பல தொழில் புரிந்த மக்களைக் கொடுத்து மகிழ்ந்து உறவைப் பெருக்கிய நிலமும் விழுப்புரம் பகுதியே அல்லவா!

சென்னைப் பிரம்பூரில் பிறந்து புதுவை நகரில் வணிகராகவும் அரசியல் தந்திரியாகவும் வாழ்ந்தவர், நடப்புச் செய்திகளை நாள்தோறும் எழுதி வைத்து வரலாற்றைத் தந்தவர் ஆனந்தரங்கப்

பிள்ளை. அவரது நண்பர்களும் வணிகர்களும் வாழ்ந்த தொடர்புடைய பகுதியும் விழுப்புரம்-கடலூர் உட்பட்ட பகுதியே யாகும்.

பெண்ணை யாறும் சங்கராபரணி யாறும் கெடிலநதியும் பாய்ந்து பரவிய பகுதியுள் அடங்கிய திருநிலம் இது.

நீர் வளமும் நில வளமும் நிறைந்த பகுதி! கிழக்கிலும் மேற்கிலும் தெற்கிலும் வடக்கிலும் நாட்டின் போக்கு வரத்துப் பாதைகள் சந்திக்கும் இடமுமாகும் இப்பகுதி. எனவே அரசியல் தாக்க மும் வாணிப வளமும் இங்கு எப்பொழுதும் முன்னணி பெற்றிருந்திருக்கிறது.

இப்பொழுதும் விழுப்புரம் முழுப் பயன்கள் தரும் திருவிடமாகவே திகழ்கின்றது! அல்லவா?

விழுப்புரம் கடலூர் புதுவை திண்டிவனம் செஞ்சி என விளங்கும் ஐந்து நகரங்களின் வட்டத்துக்குள் வளமான நிலமும் திறமான வாழ்வும் இருக்கக் காண்கிறோம்.

வரலாற்றின் பழமை முதல் இன்று வரையில் விழுப்புரம் பகுதி குறிப்பிடத்தக்க சிறப்புடன் வாழ்ந் துள்ளதை வரலாறு காட்டுகின்றது.

சோழரைச் சுட்டும் வளவன் என்னும் பெய ரோடு தொடர்புடைய வளவனாற்றூர், வளவ நல்லூர், வளவன்தாங்கல், வளவன்மாதேவி

(வளையமாதேவி) போன்ற ஊர்களின் வரிசையில் வளவனூரும் ஒன்று.

சோழரது குடிப் பெயரோடு விளங்கும் இந்த வளவனூரைச் சுற்றிலும் வரலாற்றின் வேர்கள் இன்னமும் பரவிக் கிடப்பதை எண்ணி இன்புறலாம்

கண்டராதித்த சோழனின் பெயருடன் தோன்றியதான இன்றைய கண்டமங்கலம் ஒருபுறம்.

சம்புவராயரோடு தொடர்புடைய கோலியனூர் மறுபுறம்.

மாமன்னர்கள் வாழ்ந்ததை இன்னமும் பறை சாற்றிக் கொண்டிருக்கும் மாளிகைமேடு மற்றொரு புறம்!

புறாவுக்காகத் தன் சதையையே அறுத்துக் கொடுத்து, அடைக்கலம் தந்து அரும் புகழ் கொண்ட சிபிச் சக்கரவர்த்தியின் சிறப்பைக்கூறும் பனையபுரம் எனும் பழம்பெரும் ஊர் ஒருபுறம்!

இதுவே தேவாரப் பாடல் பெற்ற பனங்காட்டூர் ஆகும்.

சமணமும் சைவமும் வைணவமும் தமிழோடு, தமிழ் மக்களோடு இங்கே சாதித்துள்ள வாழ்வு, நினைந்து நினைந்து மகிழத் தக்கதாக உள்ளது.

மக்களின் வளமும் புகழும் அவர்கள் வாழ்ந்து வளர்ந்ததை விளக்கும் சான்றுகளோ பலவாக உள்ளன. அவற்றில் கண்முன் காட்டும் பழமைச் சான்றுகளாகக் கோயில்கள் விளங்குகின்றன.

கோயில்கள் எத்தனை பெரிய சான்றுகள் என்று நன்கு சிந்தித்துப் பார்த்தால், நாம் மலைத்துப் போவோம். இவை வரலாற்று விளக்கங்கள் அல்லவா! பழம் பண்பாட்டைப் பறைசாற்றும் சின்னங்கள் அல்லவா!

கோயில்களால் அதைக் கட்டிய மன்னர்களை அறிகிறோம். பலவேறு காலங்களில் வாழ்ந்த மன்னர் ஆட்சிமுறைகளை அறிகின்றோம். பலவேறு அரசியல் மாற்றங்களை உணர்கிறோம்.

பக்தியை வளர்க்க மட்டுமா கோயில்கள்! அல்ல அல்ல! மக்கள் சமுதாயத்திற்குப் பயன்தரும் பல நலங்களை நிகழ்த்தும், பலதுறைகளைஇயக்கச் செய்யும் பல்கலைக் கூடங்களாகக் கோயில்களை அமைத்தனர் நம் முன்னோர்.

மக்களின் அன்றாட வாழ்வில் அனைத்துத் துறைகளுக்கும் சார்ந்த ஒரு பொது இடமாக விளங்கவே நம் முன்னோர் கோயில்களை அமைத் தனர்.

வாழ்க்கைப்பிரச்னைகள், வளரும் நடைமுறைகள் மட்டுமா? வகை வகையான கல்வியும் கலைகளும் கூட கோயில்களிலே கொலுவேறின.

கூடி வாழும் மக்கள் எல்லோருக்கும் பொது மன்றமாகக், கல்விக் கூடமாகக், கலைக் கூடமாக விளங்கவே கோயில்களைத் திட்டமிட்டு உருவாக்கியுள்ளனர்.

எனவேதான் பிற்காலத்து வாழ்ந்த ஔவையார் 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று அறிவுரை புகன்றார்.

சோழனின் சொந்தப் பெயரால் வளவனூர் ஆனதோ, சொந்த மண் வளத்தால் வளவனூர் ஆனதோ!சரியாகத் தெரியவில்லை நமக்கு! ஆனால் பெயர் மட்டும் சரியாகத்தான் அமைந்துவிட்டது!

இத்தகைய பரந்த எண்ணங்களின் பழமைச் சிறப்பைக் கொண்ட பகுதியில் விளங்கும் விழுப்புரத்திற்கு அருகே, வளமுடன் விளங்குவது வளவனூர் திருநகர், வருடம் முழுவதும் வளமுடன் காட்சி தரும் செழித்த நிலங்களுடன் காணப் பெறுவது வளவனூர்.

வளமான பகுதியே வளவனூர்! எப்பொழுதும் முப்புறத்திலும் தப்பாது பஸ்களும் கார்களும் இரயில்களும் ஓசையிட்டபடி ஓடிக் கொண்டேயிருக்கின்றன.

சாரிசாரியாக மக்கள் கூட்டம் வந்துகொண்டும் போய்க்கொண்டும் உள்ளனர்.

கும்பல் கும்பாலாய் மக்கள் குவிந்து கூடியும் கலைந்தும் நடந்தும் நின்றும் உள்ள காட்சி கண்

கொள்ளாக் காட்சி. பகலில்மட்டுமல்லாதுஇரவிலும் பலவித வண்டிகளின் பயணம் தடைப் படாமல் உள்ளது. தூங்காத திருநகராகத் திகழ்கிறது இந்த வளவனூர்.

பார்க்கும் இடமெல்லாம் பசுமை கொழிக்கும் பாங்கு யாரையும் பரவசப்படுத்தும். செந்நெலும் கரும்பும் கேழ்வரகும் கம்பும் சிறந்த பணப் பயிரான வேர்க் கடலையும், தென்னையும் வாழையும் பனையும் பருத்தியும் என, எண்ணற்ற பயன் தரும் பயிர்கள் கண்ணுக்கும் குளிர்ச்சி! இம் மண்ணுக்கும் உயர்ச்சி!

பரந்த விவசாயத்தை ஒட்டிய பல்வேறு வணி கங்களும் வளர்ந்துள்ள ஊர் இது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே பெரும் பெரும் கல்விக் கூடங்கள் இங்கு உள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

நெடுக்கும் குறுக்குமாகப் பல வீதிகள் நெருங் கிக் கிடக்கின்றன.

நடுவிலே பொதுவான பயணப் பெருஞ்சாலை! வடக்கேயுள்ள பகுதி குமாரகுப்பம் எனும்பெயரோடு விளங்குகிறது அங்கேயும் கோயில்கள் உள்ளன.

பெருஞ்சாலையின் தெற்கேயும் ஊர் உள்ளது. அதன் பெயரே இப்பொழுதுள்ள வளவனூர்!

பழமையான ஊர், தடம் மாறியுள்ளது. இடம் பெயர்ந்துள்ள இன்றைய வளவனூர் பழமையின்

எல்லையாக, வரம்பாக, வீட்டுக்குத் தோட்டம் போல் அடுத்த பகுதியாகத் திகழ்கின்றது.

அக்கால நகரம் எப்படி யிருந்ததோ! கோயில்களும் குளங்களும் எங்கெங்கு எப்படி அமைந்திருந்தனவோ!

எங்கோ இருந்த சிவன்கோயில் இடம்பெயர்ந்து புதிய இடத்தில் குடி கொண்டிருக்கிறது. அதன் அடையாளங்களை ஆங்காங்கே காண்கிறோம்.

ஊரின் கிழக்கே சிவன் கோயில்! மேற்கே திருமால் திருக்கோயில்! பழமைக்குக் கட்டியம் கூறும் புதுமையின் விளக்கமாக இக் கோயில்கள் திகழ்கின்றன.

நெடுஞ்சாலைக்குத் தெற்கிலே உள்ள இக் கோயில்கள், பயணிகளின் கண்களில் படாமலே தள்ளி நிற்கின்றன. தென்புறமாகச் செல்லும் கடலூர் சாலைக்குக் கிழக்கில் சிவன் கோயிலும் மேற்கில் பெருமாள் கோயிலும் காட்சி தருகின்றன. பதினாறாம் நூற்றாண்டின் முத்திரையோடு விளங்கும் இக் கோயில்களைக் காணவேண்டும்; இவற்றின் வாயிலாக முன்னாள் வாழ்வை அறிய வேண்டும்.

கட்டடக் கலைகளை உணரவும் சிற்பிகளின் கலைத்திறனை அறியவும் இக் கோயில்கள் உதவுகின்றன.

சிறந்த வரலாற்றைச் சீராகக் கூறத்தக்க அரிய சாதனங்களாக உள்ள வளவனூர் கோயில்களைக் கண்டு பழங்காலத்தைப் பார்த்தறிய முயல்வோம்.

குகைகளில் வாழ்ந்த மனிதன் கூடு கட்டி வாழும் பறவைகளைக் கண்டு, தானும் வீடு கட்டி வாழ முற்பட்டான். மாடமாளிகைகள் வளரலாயின.

மன்னர் மாளிகைகளைப் போலக் கடவுளுக்கு மாடக் கோயில்களும் கோட்டங்களும் தோன்றலாயின. கலைஞரின் கற்பனையும் கலைப் பாங்கும் கல்லிலே உயிர்கொண்டு களிநடம் புரியத் தொடங்கின.

கோயில்களின் கட்டடக் கலையை மக்கள் உள்ளபடி உணர்வதில்லை. சிற்பக் கலையில் உள்ள புராணக் கருத்துகளின் உருவகத்தை, இதிகாசங்களின் வெளிப்பாட்டை முறையாக அறிந்து மகிழ்வதில்லை, இச்சிறு நூல் ஒரு முன் மாதிரியாக நம் கோயில் கலையைக் கூற முயல்கிறது.



# திருக்கோயில்

## அமைவிடம்

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் எனும் புதிய மாவட்டத்தில் விழுப்புரம் வட்டத்தில் உள்ளது வளவனூர். விழுப்புரத்திலிருந்து கிழக்கே 13 கிலோமீட்டர் தொலைவில், வளம்மிகு *வளவனூர்* கிராமம் அமைந்துள்ளது. விழுப்புரம்-புதுச்சேரி சாலையின் தென் திசையில் உள்ளது இவ்வூர். இங்கு ஜகந்நாதஈசுவரர் கோயில் அமைந்துள்ளது.

புரௌடதேச மகாராஜபுரம் என்றும் வழங்கப் பெற்றுள்ளது இவ் வளவனூர்.

## வரும் சூழலும்

பழமை வாய்ந்த சோழர்காலக் கோயில் எதிரிகளால் அழிக்கப்பெற்றது. பிறகு இங்கு ஆண்ட சிற்றரசன் ஒருவனால் புதியகோயில் எழலாயிற்று. இடிபாடுற்ற கோயிலின் தூண்கள் முதலான கட்டடப் பகுதிகளை எடுத்து வந்து, புதிய இடத்தில் எழுப்பியுள்ளனர்.

பதினாறாம் நூற்றாண்டின் பழமைச் சுவடு களுடன் எழுந்த புதிய கோயிலையே இன்று நாம் வளவனூரில் காண்கிறோம்.

இக் கோயிலுக்கு, கி.பி. 1825 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கும்பினியாரால் ஒரு சாசனம் (பஹிமாஷ்) கொடுக்கப்பட்டுள்ளது. இதன்படி இக் கோயிலுக்குச் சொந்தமான இடமும் சொத்துக்களும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இன்றைய வ்ளவனூரின் அக்ரகாரத்துக்கு வட கிழக்கில் சிவன் கோயிலும், தென்மேற்கில் பெருமாள் கோயிலும் தென்கிழக்குப் பகுதியில் மாரியம்மன் கோயிலும் உள்ளன.

ஊருக்கு வடமேற்கு எல்லையில் பிள்ளையார் கோயில், அமைந்துள்ளது. வளவனூர் ஏரியின் தென்கிழக்குக்கரையில் மூலமடை ஐயனார்கோயில் உள்ளது.

இனி, சிவன் கோயிலைக் காணலாம்.

## சிவன் கோயில் அமைப்பு

இச் சிவன் கோயில்,

கருவறை
அர்த்த மண்டபம்
மகா மண்டபம்
நடராசர் சன்னதி
அம்மன் சன்னதி
கந்தப் பெருமான் சன்னதி
பரிவார தெய்வங்களின் சிற்றாலயங்கள்

நவக்கிரக மேடை
உற்சவர் மண்டபம்
வாகனக் கொட்டகை
திருச்சுற்று மதில்

ஆகிய பல பகுதிகளைக் கொண்டு அழகுற விளங்குகின்றது.

இத் தலத்தில் வீற்றிருக்கும் இறைவன் ஜகந்நாத ஈசுவரர் என்னும் பெயரில் வழங்கப்படுகின்றார்.

இறைவன் வீற்றிருக்கும் உண்ணாழி எனும் கருவறை கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ளது.

கருவறை சதுர வடிவம் உடையது.

உண்ணாழியின் நடுவே எழுந்தருளியுள்ள சிவலிங்கம், உருவில் சிறியது. வட்ட வடிவான ஆவுடையார் மீது லிங்க வடிவம் காட்சி அளிக்கின்றது.

கருவறை வாயில் அரைத்தூண்கள் இன்றி எளிய முறையில் விளங்குகின்றன. இதன் வாயில் சுவர் 88 சென்டிமீட்டர் அகல முடையது.

**புறச் சுவர்**

உண்ணாழி புறச்சுவர் அதிட்டானம், வர்க்க பேதமின்றி, மிகவும் எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது.

உண்ணாழியைச் சுற்றியுள்ள தேவகோட்ட மாடங்களில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் முறையே தட்சிணாமூர்த்தி, திருமால், நான்முகன் ஆகிய தெய்வ உருவங்கள் காட்சி அளிக்கின்றன.

**விமானம்**

கருவறை மேல் உள்ள விமானம் இரு தளங்களை உடையது. ஒவ்வொரு தளமும் கர்ணக்கூடு, சாலை என்னும் உறுப்புகளைக் கொண்டு மாறி மாறி அமைந்து விளங்குகிறது.

விமானத்தின் தென் திசையில் உள்ள சாலையில் அரவமும் அனலும் சுவடியும் ஏந்தி, சின் முத்திரை காட்டித் தத்துவம் போதிக்கும் வித்தகரான (வியாக்கியான) தட்சிணா மூர்த்தியின் சுதை உருவம் அலங்கரிக்கிறது.

மேல்திசை மாடத்தில் திருமாலைக் காணலாம்.

சங்கு, சக்கரம் ஏந்தி, அபய வரதமளிக்கும் திருமாலின் அமர்ந்தகோலத் தோற்றம் அழகுறக் காட்சியளிக்கிறது.

வடதிசையில் அக்கமாலை, கெண்டியை ஏந்தி அபய வர்தமளிக்கும் நான்முகனின் உருவத்தைக் காணலாம்.

கீழ்த்திசைச் சாலையில் மழுவும் மானும் ஏந்தி அமர்ந்து அருள்பாலிக்கும் சிவனது சுதை உருவம் காணப்படுகிறது.

இவ்வாறு விமானத்தின் இரண்டாவது தளத்தை அலங்கரிக்கும் சாலைகளில் முறையே தெற்கில் வீணாதர தட்சணா மூர்த்தியும், மேற்கில் திருமாலும், வடக்கில் நான்முகனும், கிழக்கில் சிவனும் அமர்ந்த கோலத்தில் சுதை வடிவில் காட்சி அளிக்கின்றனர்.

விமானத்தின் மேல் உள்ள கிரீவம் என்னும் கழுத்துப் பகுதி, நான்கு திசைகளிலும் அவற்றுக் குரிய தெய்வ வடிவங்கள் அமைக்கப் பெற்று விளங்கக் காண்கிறோம்.

கோயில் விமானச் சிகரங்கள் மூன்று வகை என்பர். வட்டவடிவுடைய சிகரத்தை வேசரவகை என்பர். சதுரமான சிகரத்தை நாகர சிகரம் என்பர். எண் பட்டை வடிவமுள்ள சிகர அமைப்பைத் திராவிட சிகரம் என்பர். இக் கோயிலின் சிகரம் வட்ட வடிவமானது. எனவே, இதை வேசர சிகரம் என்பர்.

இந்தச் சிகரத்தின் மீது உலோக ஸ்தூபி அலங்கரிக்கிறது.

உண்ணாழிச் சுவரில் சுற்றிலும் அலங்கரிக்கும் அரைத் தூண்கள் இங்குக் காட்டப்படவில்லை. அவ்வாறு தேவக் கோட்டங்களின் பக்கங்களிலும் வேலைப்பாடு இல்லாத தூண்கள் அமைந்துள்ளன.

தேவக் கோட்டத்தின் மீது மகர தோரணங்கள் அமைப்பது ஒரு முறை. இங்கு அவை காட்டப்பட வில்லை.

எளிய கபோதக வரியின் கீழ், பூதகண வரியின்றி வரிசையாக மதலைகள் காட்டப்பட்டுள்ளன. மதலைவரிகள் என்பது மேல்நோக்கி விரிந்த தாமரை இதழ்களின் வடிவ வரிசையாகும். கபோத கத்தின் மீதுள்ள மேற்பகுதியும் யாளிவரி யின்றி எளிமையாக அமைந்துள்ளது.

## அர்த்த மண்டபம்

உண்ணாழியாகிய கருவறையின் முன்புறம் நீண்ட சதுர வடிவில் அர்த்த மண்டபம் அமைந் துள்ளது.

தூண்களின்றி எளிய அமைப்புடைய இம் மண்டபத்தின் நடுவில் நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியவை அமைந்துள்ளன.

அர்த்த மண்டப வாயிலும் திருநிலைக்காலும் எளிமையான அமைப்புடன் திகழ்கின்றன.

வாயிலின் மேல் விளம்பில், எதிர் எதிரே நின்று சீறும் நிலையில் யாளி வரிகள் வனப்புடன் அலங் கரிக்கின்றன.

உண்ணாழியின் புறச்சுவரைப் போன்று அர்த்த மண்டபப் புறச்சுவரும் அதிட்டான வரிகள் இன்றி எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபக் கோஷ்டத்தில் தெற்கிலும் வடக்கிலும் விநாயகர், துர்க்கை ஆகிய தெய்வ உரு

வங்கள் அமைந்து காட்சி அளிக்கின்றன. கருவறையைப் போல் இங்கும் சுவரின் மேல் பூதகணங்கள் காட்டப்படாமல் மதலைகள் வரிசையாக அலங்கரிக்கக் காண்கிறோம்.

## மகா மண்டபம்

அர்த்த மண்டபத்தின் முன்புறம் மகாமண்டபம் அமைந்துள்ளது. சதுர வடிவுடைய இம் மண்டபத்தை எட்டு கல் தூண்கள் தாங்கி நிற்கின்றன.

இத் தூண்கள் 2½ மீட்டர் உயரமுடையவை. இவை வட்ட வடிவு உடையதாகவும் (உருளை) எண்பட்டை வடிவு உடையதாகவும் மேலும், கீழும், இடையிலும் சதுரமாகவும் அமைந்து, இடைப்பகுதி எண்பட்டை உடையுதாகவும் அமைந்து அழகுறக் காட்சி அளிக்கின்றன.

இத் தூண்கள் யாவும் இவ்வூரைச் சார்ந்த பழைய சிவாலயத்துக்கு உரியவை. 150 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இரண்டாம் திருப்பணியின் போது, அவற்றைச் சேகரித்து இம் மகாமண்டபத்தை எழுப்பியுள்ளனர்.

தூண்கள் யாவும் சோழர், விஜயநகர மன்னர், சம்புவராயர் ஆகியோரின் காலத்தியவையாகும்.

இங்குள்ள தூணின் போதிகை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள விஜயநகரக் கல்வெட்டுகாணத்தக்கது.

இவை சிற்பங்கள் செதுக்கப்படாத எளிய கல்தூண் களாகத் திகழ்கின்றன.

**நடராஜர் சபை**

மகாமண்டபத்தின் வடதிசையை ஒட்டி நடராஜர் சபையின் நுழைவாயில் முன்புறம் அமைந்துள்ளது. நடுவே உள்ள இரு தூண்களை ஒட்டிப் பக்கச் சுவர் எடுத்துள்ளனர்.

சபையின் நடுவே உயர்ந்த பீடத்தின் மீது நடராஜர், சிவகாமி, மணிவாசகப் பெருமான் ஆகியோரது செப்புத் திருமேனிகள் தென்திசை நோக்கிக் காட்சி அளிக்கின்றன.

நடராஜர் சபையின் முன்புறம் மகாமண்டப வாயில் அமைந்துள்ளது.

இக் கோயிலில் உண்ணாழியை அடைய மகா மண்டபத்தின் கீழ்த்திசையில் இருந்த திருவாயில் அடைக்கப்பட்டுள்ளது. மாறாக, ஒன்பது முகத்தை உடைய சன்னலை மட்டும் பாதுகாப்புக் கருதிப் பொருத்தி உள்ளனர். இப்பாதுகாப்பு ஏற்பாடு அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மகாமண்டபத்தில் நடராஜர் சபையின் எதிரே உள்ள வாயிலே பிரதான வாயிலாக இங்குத் திகழ்கிறது.

மகா மண்டபத்தின் முன்புறம் கீழ்த்திசையில் உள்ள நந்தி மண்டபம் உண்ணாழியை நோக்கி அமைந்துள்ளது.

இம் மண்டபத்தை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. நடுவே உள்ள நந்தியைச் சுற்றிலும் மழைவேண்டி நீரை நிரப்ப ஏதுவாகச் சுவர் எடுக்கப் பட்டுள்ளது.

நந்தியின் முன்புறம் கம்பீரமாக உயர்ந்து விளங்கும் கொடிமரம், உலோகத்தகடுகள் வேய்ந்த நிலையில் வனப்பூட்டுகின்றது.

## அபிராமி அம்மன் கோயில்

சிவாலயத்தில் வடதிசையில் கந்தர் சன்னதியை அடுத்து அருள்மிகு அபிராமி அம்மன் சன்னதி அமைந்துள்ளது.

கீழ்த்திசையை நோக்கி உள்ள இச் சன்னதி உண்ணாழி, அர்த்தமண்டபம் மகா மண்டபம், முன் மண்டபம் ஆகிய பகுதிகளைக்கொண்டு திகழ்கிறது.

அம்மன் சன்னதி கருவறை, சதுர வடிவில் உள் ளது. கருவறையின் உட்பக்க அளவு 1. 50 மீட்டர் ஆகும்.

கருவறையின் நடுவே பத்ம பீடத்தின் மீது நான்கு கைகளுடன் நின்று அருள் பாலிக்கும் கோலத்தில், அம்மனின் திருவுருகாட்சி அளிக்கிறது.

அம்மனின் மேல் வலக்கை அங்குசத்தையும், இடக்கை பாசத்தையும் ஏந்தி உள்ளன.

கீழுள்ள இரு கைகள் முறையே அபய முத்திரை யிலும் வரத முத்திரையிலும் அமைந்து விளங்கு கின்றன.

அம்மனின் முடியைச் சடைமகுடம் அலங்கரிக் கிறது.

காதுகளில் பத்ர குழைகள் (ஓலை), கண்டசரம்' கேயூரம், கைவளை, காப்பு, பூணூல், மேகலை, இடைக்கச்சை, பாதசரம் ஆகிய அணிகள் அம்மனை அழகு செய்கின்றன.

இத்தலத்து அம்மன் அபிராமி என்ற பெயரில் அழைக்கப் பெறுகிறார்.

இச் சன்னதி கி.பி. 17–18 ஆம் நூற்றாண்டில் முழுமையாகத் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

கருவறையைச் சுற்றியுள்ள புறச்சுவர்கள் அதிட்டான வரிகள் இன்றி எளிமையாக அமைந்து விளங்குகின்றன.

தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் தேவகோட்ட மாடங்கள் முறைப்படி அமைந்து காணப்படுகின்றன.

மாடங்களின் மீது கீர்த்தி முகத் தோரணங்கள் அலங்கரிக்க, நடுவே மனித முகங்கள் அமைத்துக் காட்டப்பட்டுள்ளன.

சுவரைச் சுற்றிலும் எளிய அரைத் தூண்கள் அலங்கரிக்கின்றன.

சுவரின் மீதுள்ள கபோதகப் பகுதி யாளிவரி, கொடுங்கை, மதலைகள் ஆகிய உறுப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

அம்மன் சன்னதி உண்ணாழியை, இரு தளங்களை உடைய (துவிதள)விமானம் அலங்கரிக்கிறது.

விமான தளங்கள் முறையே கர்ண கூடுகளையும், சாலைகளையும் கொண்டு விளங்கக் காண்கிறோம்.

விமானதளச் சாலைகளில் தெய்வ உருவங்கள் எதுவும் காட்டப்படவில்லை.

விமானத்தில் கிரீவம் எனும் பகுதி சதுர வடிவில் அமைந்து காணப்படுகிறது. அதன் மேலுள்ள சிகரம், சதுர வடிவில் நாகர சிகரமாக அமைந்து விளங்கக் காண்கிறோம்.

சிகரத்தின் உச்சியில் உலோகத்தால் ஆன ஸ்தூபி அமைந்துள்ளது.

இவ்விதம் அதிட்டானம் முதல் சிகரம் வரை எளிய அமைப்புடன் அம்மன் கோவில் விமானம் காட்சி அளிக்கிறது.

அம்மன் சன்னதி முன்புறம் சதுரமான அர்த்த மண்டபத்தைக் காணலாம். இம் மண்டபம் தூண்கள் இன்றி எளிமையாக அமைந்து விளங்குகிறது. இம் மண்டபத்தின் புறச்சுவர் கருவறையை ஒத்த அமைப்பு உடையது.

அர்த்த மண்டப வாயிலும், நிலைக்காலும் எளிய அமைப்புடையவை.

வாயிலின் மேல் முகப்பை கஜலட்சுமியின் சிற்ப உருவம் அலங்கரிக்கிறது. அதன் இரு பக்கங்களி லும் இரு பணிப் பெண்கள் கையில் சாமரம் ஏந்தி வீசும் நிலையில் காட்டப்பட்டுள்ளனர்.

அர்த்த மண்டபத்தின் முன்புறம் மகா மண்டபம் அமைந்துள்ளது.

இம் மண்டபத்தை, இரு வரிசைகளில் ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத் தூண்கள் யாவும் உருளை வடிவிலும், அறுபட்டை வடிவிலும், மேலும் கீழும் நடுவிலும் சதுரமாக அமைந்து, இடையே உள்ள பகுதி பதினாறு பட்டை வடிவிலு மாக வனப்புடன் விளங்கக் காண்கிறோம்.

இத் தூண்களில்

பூக்கள்
வட்டங்கள்
குந்து சிம்மம்
சைவ அடியார்
கோதண்டராமர்
கூப்பிய கரங்களுடன் நிற்கும் சிற்றரசன்
ஆறுமுகப் பெருமான்
சிவனுடைய வாகனமான காளை

ஆகிய சிற்ப உருவங்களைக் காணலாம்.

மகாமண்டபத்தின் வடதிசையில் உள்ள தூண்களை ஒட்டிப் பிற்காலத்தில் தடுப்புச் சுவர் எழுப்பித் தானியங்கள் சேமிக்கும் களஞ்சிய அறையாகப் பயன்படுத்தியுள்ளனர்.

மகா மண்டபத்தின் முன்புறம் இரு பக்கச் சுவர்களில் அங்குசம், பாசம், கதாயுதம் ஆகியவற்றை ஏந்திக் கைவிரல்களால் சூசி முத்திரை காட்டும் துவார பாலகைகளின் சிற்ப உருவங்களும் காணத் தக்கவை.

அடுத்து, தென் திசையின் முன்புறச் சுவரில் மல்யுத்த வீரர்கள் இருவர் தோன்றி மற்போர் செய்யும் காட்சி காணத் தக்கது.

இவர்கள் தம் முன் கால்களால் ஒருவரை ஒருவர் முட்டிக் கொண்டும், கட்டுமஸ்தான புஜத்தைக் கையால் ஒருவர் பற்றித் தடுத்த நிலையிலும், ஏனைய கைகளில் இருவரும் வட்டமான குத்துக் கட்டைகள் பற்றிய நிலையிலும் மற்போர் செய்யும் காட்சி, பார்ப்பவர் கவனத்தை ஈர்க்கத் தக்கது.

இவர்களின் கட்டுமஸ்தான உடல் வாகும், திரண்ட தோளும், விரிந்த மார்பும், மார்பினை அலங்கரிக்கும் நீண்ட பதக்கமும், தலைக் கோலமும் நேரில் கண்டு களிக்கத் தக்கவை. 17-18 ஆம் நூற்றாண்டின் வீர விளையாட்டுகளை இச் சிற்பங்கள் நினைவூட்டுகின்றன.

மகா மண்டபத்தின் வெளிச் சுவரில் மேல் திசையை நோக்கிய வண்ணம் மற்றொரு போர்க் காட்சி செதுக்கப்பட்டுள்ளது.

இங்கு வீரன் ஒருவன் புலியுடன் சண்டை செய்கிறான். பாய்ந்து வரும் புலி வீரனின் இடது கையைக் கவ்விப் பிடிக்க, வீரனோ அப் புலியைத் தன் கையிலுள்ள குறுவாளால் குத்தி, இடது கையைப் புலியிடமிருந்து மீட்கும் காட்சி காண் போர்க்குப் புல்லரிக்கும் நிலையில் சித்திரிக்கப் பட்டுள்ளது.

இதனைப் பிந்தைய நாயக்கர் காலக் கலைப் படைப்பு என்று கருதலாம். வடபுறத்தில் உள்ள வெளிச்சுவரில் நாட்டிய மங்கை நடனமாட, ஒருவர் மத்தளம் கொட்ட, ஒருவர் அதைக் கண்டுகளிக்கும் நிலையில் ஆடவர் உருவம் ஒன்று சிற்ப வடிவில் செதுக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபத்தைத் தாங்கும் இரு தூண்வரிசைகள் மீது அமைந்துள்ள உத்திரங்களின் மேல், பல் வகையான சிற்ப உருவங்களைக் கண்டு களிக்க லாம்.

நான்முகன், ஸ்ரீதேவி, பூதேவி சூழக் காட்சி தரும் மகாவிஷ்ணுவின் நின்ற திருக்கோலம்.

காளை வாகனத்தின் மீது சாய்ந்து காட்சிதரும் ரிஷபாந்தகர், அவரது அருகில் தோன்றும் உமா பரமேஸ்வரி,

மழுவும் மானும் மேற்கைகளில் ஏந்தி முன் கை களைக் கூப்பி நிற்கும் அதிகாரநந்தி,

அருகில் அல்லிமலர் ஏந்தி நிற்கும் தேவி,

ஆனந்தக் கூத்தாடும் ஆறுமுகப் பெருமான், ஆகியோரின் சிற்பங்கள் கீழ்த்திசையை நோக்கிய நிலையில் காட்சி அளிக்கின்றன. அடுத்து சிவபெருமான் வலக் காலைத் தூக்கி ஊர்த்துவ தாண்டவமாடும் காட்சியும்.

அருகில் புலிக்கால் முனிவரும், கிளி முகத்தை யுடைய சுகப் பிரம்மம் அஞ்சலித்து நிற்கும் காட்சியும்,

இரு பக்கங்களில் ஆனைமுகத்தானும், ஆறு முகப்பெருமானும் கண்டுகளிக்கும் காட்சியும், சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஊர்த்துவ தாண்டவரின் அருகில் எண் தோள் களை உடைய தில்லைக்காளி பல்வகை ஆயுதங் களை ஏந்தி நாட்டியமாடும் காட்சியும், இரு பக்கங் களில் சாமரம் ஏந்தி நிற்கும் இரு பணிப் பெண் களும், நாரதரும் மத்தளங் கொட்டும் கலைஞர்கள் இருவருமாகத் தோன்றும் சிற்பக் காட்சியைக் கண்ணாரக் காணலாம்.

அடுத்து, ராமாயணக்காட்சி ஒன்று செதுக்கப் பட்டுள்ளது. அருள் பாலிக்கும் மகாலட்சுமிக்கு அருகில் குந்து சிம்மத்திற்குக் குடைபிடிக்கும் பணிமகளும் சிலையும் கணையும் ஏந்திய நிலையில் தோன்றும் இராமபிரானும், வலக்கையில் மலரைப்

பற்றி நிற்கும் சீதாபிராட்டியும், அம்பும் வில்லும் ஏந்தியவாறு பணிந்து நிற்கும் இலக்குமணப் பெருமாளும், அருகில் அனுமனும், சாமரை, ஏந்திய பணிப் பெண்ணும், அஞ்சலிக்கரகளுடன் நிற்கும் விபீஷணனும் காட்டப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து, பாம்பணையில் பள்ளி கொண்ட பெருமாளான அரங்கநாதரும், அவரது தலையிலும், திருவடியிலுமாக அமர்ந்த நிலையில் தோன்றும் ஸ்ரீதேவி பூதேவி நாச்சியாரும் மிகச் சிறப்புறச் செதுக்கப்பட்டுள்ளதை நாம் இங்கே காணலாம்.

அடுத்து, மேல்திசையை நோக்கியுள்ள உத்திரத்தின் மீது கைகளில் கோல்கள் ஏந்திக் கோலாட்டமிடும் நாட்டிய மகளிர் அறுவரின் உருவங்களும் பாங்குறப் படைக்கப்பட்டுள்ளன.

பக்கங்களில் இவர்களுடைய ஆடலுக்கு ஏற்ப மத்தளமிடும் மத்தளக் கலைஞரும் காணப்படுவது இங்குக் குறிப்பிடத் தக்கது.

உடலை வளைத்து நெளித்து, கைகளை நீட்டி மடக்கி நாட்டியமிடும் மகளிரின் ஆடல் நிகழ்ச்சியைப் புடைப்புச் சிற்பங்கள் சிறப்பாகச் சித்திரிக்கின்றன.

அடுத்து, தென் திசையில் இராமபிரான், இலக்குவன், அனுமன் ஆகியோர் தோன்றும்

இராமாயணக்காட்சி ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. அடுத்து, தாடி தரித்த முனிவர் ஒருவர், கையில் வீணை ஏந்தி வீற்றிருக்க, பக்கத்தில் அடியார்கள், பணிப்பெண்கள், ஆடவர், பெண்டிர் ஆகியோர் காட்சி அளிக்கின்றனர்.

அவற்றைத் தொடர்ந்து, வணங்கிய நிலையில் நான்கு முனிவர்கள் நிற்கும் காட்சியைக் காண லாம்.

இறுதியாக, எண்திசைக் காவலர்களின் சிற்ப உருவங்கள் அவர்களுக்கு உரிய வாகனங்களுடன் காட்டப்பட்டுள்ளன. இவையும் கண்டு களிக்கத் தக்கவை ஆகும்.

இவர்கள் அனைவரும் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர். அவர்க ளுடைய மேல்கைகள், உரிய ஆயுதங்களை ஏந்தியுள்ள நிலையிலும் கீழ்க் கைகள் அபயவரதம் அளிக்கும் நிலையிலும் அவர்கள் காட்சி தரு கின்றனர்.

இந்திரன். குபேரன், வாயு, வருணன், அக்கினி யாவரும் அவர்களுக்கு உரிய வாகனங்களுடன் தோன்றுவதும், அரசன் ஒருவன் அவர்களை வணங்கி நிற்பதும் இங்கு ஒவ்வொருவரும் நேரில் கண்டு களிக்கத் தக்கவை.

இச் சிற்ப உருவங்கள் 20 சென்டிமீட்டர் உயர முடையவை. உருவில் சிறியவை. பதினேழு,

பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. சிவபுராணம், இராமாயணம், பாரதம், விஷ்ணு புராணம் ஆகியவற்றின் அடிப்படையில் இவை விளங்கக் காண்கிறோம்.

**முக மண்டபம்**

மகாமண்டபத்தின் முன்புறம் இரு வரிசைகளில் ஆறு கல்தூண்கள் தாங்கி நிற்க, முன் மண்டபம் அமைந்துள்ளது.

இம் மண்டபத்தை அலங்கரிக்கும் தூண்கள் யாவும் ஒரே காலத்தவை.

இத்தூண் ஒவ்வொன்றும் மேலும் கீழும் நடுவிலும் சதுரமாக அமைந்து இடையே உள்ள பகுதி பதினாறு பட்டை வடிவில் செதுக்கப்பட்டுள்ளது.

கீழே உள்ள சதுரப் படைகளின் மேல் நான்கு மூலைகளிலும் நாகபந்தக் கட்டுகள் அலங்கரிக்கக் காண்கிறோம்.

ஏனைய சதுரப்படைகளின் நடுவே வட்டங்கள், பூக்கள், துவாரபாலிகைகள், சாமரை ஏந்தி நிற்கும் ஆரணங்கு, இம் மண்டபத்தைக் கட்டிய அடியார் ஆகியோரது உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

முகப்புத் தூண்களின் முன்புறம் இடம்புரி விநாயகரும் மயில்வாகனமும் காட்டப்பட்டுள்ளனர்.

இங்கு உள்ள தூண் ஒன்றில்,

***'வீரவல்லி செகனாத பட்டர் புத்திரன் பரசுராமன் சதா சேர்வை'***

என ப் பொறிக்கப்பட்டுள்ளது. அ ந் த க் கல்வெட்டின் கீழ் இத் தூணைச் செதுக்கிய பரசுராமரின் உருவத்தைக் காணலாம். முகத்தைத் திருப்பி அஞ்சலிக்கும் நிலையில் அவர் வீற்றிருக்கிறார்.

முக மண்டபத்தின் வாயில்படியின் பக்கங்களை இரண்டு கல் யானைகள் அலங்கரிக்கின்றன. இவை முக மண்டபத்தை முன்புறம் இழுத்துச் செல்லும் நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

படியின் முன்புறம் கலைஞர்கள் மத்தளமிசைக்க கோலாட்டம் அடித்து நடனமிடும் மகளிர் காட்டப் பட்டுள்ளனர். முகமண்டபத்தின் மேல் விதானத்தில் எதிர் எதிராக இரு மீன்களும், இரு நாகங்களும் நடுவே சந்திரனும், அடுத்து ஆமையும் செதுக்கப்பட்டுள்ளன.

முகமண்டபத்தின் முன்புறமுள்ள கொடுங்கை வளைந்து வனப்புடன் காட்சியளிக்கின்றது.

கொடுங்கையின் முன்புறம் பாய்ந்து இறங்கும் நிலையில் குரங்கின் உருவம் ஒன்று மிக நேர்த்தியாகக் காட்டப்பட்டுள்ளது.

கொடுங்கையின் மேற்புறம் யாளிவரியின் மேல் சங்கு ஊதும் சிவகணம் ஒன்றும் மூலைகளில் நந்தியின் உருவமும் காணப்படுகின்றன.

## முருகப் பெருமான் சன்னதி

சிவன் கோயிலுக்கும், அம்மன் கோயிலுக்கும் இடையில் ஆறுமுகப் பெருமானுக்குத் தனிச்சன்னதி அமைந்துள்ளது.

இச் சன்னதி சதுர வடிவம் உடையது. சன்னதியின் நடுவே மயில் வாகனத்தின் மீது முருகப் பெருமான் ஆறு தலைகளும் பன்னிருகரங்களுமாகக் காட்சி தருகிறார்.

இவரது தலைகளில் கரண்ட மகுடங்கள் அலங்கரிக்கின்றன. காதுகளில் குழை இல்லாமல் இவர் எளிமையாகக் காட்சி தருகிறார்.

கழுத்தில் கண்டசரம், முத்துமாலை, சவடி முதலிய அணிகலன்களும், இடையில் கச்சையும், கையில் காப்பும், காலில் தண்டையும், பாதசரமும் அணிந்து பன்னிருகரங்களில் சக்தி, வஜ்ரம், வாள், கேடயம் முதலிய ஆயுதங்களை ஏந்திக் காட்சி தருகிறார்.

ஆறுமுகப் பெருமானைத் தாங்கி நிற்கும் மயில், வடக்கு நோக்கித் திரும்பியுள்ளது. அதன் கூரிய அலகு நாகப் பாம்பைக் கவ்விய நிலையில் காணப்படுன்றது.

முருகப் பெருமானின் வலப்புறம் வள்ளியும் இடப்புறம் தெய்வயானையும் இரு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர்.

இரு தேவியருடைய தலையிலும் கரண்ட மகுடங்கள் அலங்கரிக்கின்றன.

வள்ளியின் காதுகளில் ஓலைக்குழையும், தெய்வயானையின் காதுகளை மகரக் குழையும் அலங்கரிக்கின்றன.

வள்ளியின் மார்பில்மட்டும் மார்க் கச்சு காட்டப்பட்டுள்ளது.

வள்ளியின் இடக்கரத்தில் தாமரையும், தெய்வயானையின் வலக்கரத்தில் நீலோத்பலமும் ஏந்தி நிற்க, ஏனைய கரங்கள் லோல அஸ்தத்தில் தொங்கும் கரமாகக் காட்சி அளிக்கின்றன.

இச் சிற்பக் குழு 18 ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சன்னதியின் முன்புறம் தென்திசையில் இடம்புரி விநாயகர் வடிவம் ஒன்றும் வடதிசையில் நாகர்கள் வடிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

முருகன் சன்னதி விமானம் ஏகதள விமானமாக விளங்குகிறது.

சிகரம், சதுர வடிவில் நகார சிகரமாக அமைந்துள்ளது.

இச்சன்னதியின் முன்புறம் முகமண்டபம் அமைந்துள்ளது. இம் மண்டபத்தை இரு வரிசைகளில் ஆறு தூண்கள் தாங்கி நிற்கின்றன.

இதில் இடம்புரி விநாயகர், மயில் முன்பு தோன்றும் வில்லேந்திய வேலர், சைவ அடியார்,

உருவங்கள், இடும்பன் ஆகியோரின் உருவங்கள் காட்டப்பட்டுள்ளன.

முகமண்டபத்தின் நடுவே முருகப் பெருமானின் வாகனமான மயிலும்பீடமும் அமைக்கப்பட்டுள்ளன.

இறைவனுக்கும் இறைவிக்கும் நடுவே உள்ள இந்த கந்தர் சன்னதியின் அமைப்பு, குழந்தை முருகனுடன் அம்மையப்பராகத் தோன்றும் சோமாஸ்கந்தர் திருவுருவை நினைவூட்டுகிறது. இக் கருத்தில் இச்சன்னதிகள் எழுப்பப்பட்டுள்ளன.

## பரிவார ஆலயங்கள்

இக் கோயிலைச் சுற்றி வலம் வருவோமானால், கிழக்கில் சூரியனும் வடமேற்கில் துர்க்கையும், வடக்கே பைரவரும் வடகிழக்கில் விநாயகரும், வடகிழக்கு மூலையில் நவக்கிரக மேடையும், அருகில் அனுமனும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர்.

வன்னிமரத்தின் அடியில் உள்ள விநாயகரை வன்னிமரத்தடி விநாயகர் என மக்கள் அழைத்து வழிபடுகின்றனர்.

உடுக்கை, பாசம், திரிசூலம், கபாலம் ஆகிய ஆயுதங்களை ஏந்தி, தலையில் அனல்மகுடம் அலங்கரிக்க, ஆடையற்ற திருவுருவாய்த் தோன்றும் பைரவரின் நின்ற கோலம் காண்போரைக் கவரத் தக்கது.

இவரது மார்பில் கபாலமாலையும், இடையில் நாகத்தால்ஆன அரைஞாணும் அணிந்துள்ளார்.

இச்சிற்ப வடிவம் கி.பி. 17—18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இத்தலம் தேவாரப் பாடல்களைப் பெறவில்லை எனினும் பக்தர்களின் அபிமானத் தலமாக விளங்குகிறது.

இத்தலத்திற்கு உரிய ஸ்தலமரம் வன்னி மரமாகும். அழகான அடர்ந்த வன்னி மரத்தைத் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் காணலாம்.

வடகிழக்கு மூலையில் கிணறு காணப்படுகிறது. இச் சிவன் கோயிலுக்கென்று தனியாகத் திருக்குளம் இல்லை.

அபிடேக காலங்களில் தேவையான நீரைத் திருச்சுற்றுக் கன்னி மூலையில் உள்ள கிணற்றிலிருந்து பெறுவர்.

இக்கோயிலில் உள்ள ஜகந்நாதீஸ்வரர், ஆறுமுகப்பெருமான், அபிராமி அம்மன் ஆகிய சன்னதிகளைச் சுற்றி வலம் வரத் திருச்சுற்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் திருச்சுற்றை ஒட்டி நாற்புறமும் உயரமான மதில் எழுப்பப்பெற்றுள்ளது. திருச்சுற்று மதிலின் கீழ்த்திசையில் கோபுரவாயில் அமைந்துள்ளது.

திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் இக் கோயிலுக்குரிய வாகன மண்டபம் அமைந்துள்ளது. அவ்வாறே தென்மேற்கு மூலையில் உற்சவர் மண்டபம் உள்ளது. இக்கோயிலுக்கு உரிய உற்சவச்சிலைகள் அனைத்தும் வழிபாட்டில் உள்ளன.

இராஜகோபுரத்தின் முன்புறம் உள்ள முன் மண்டபம் பதினாறு கால் மண்டபமாக அமைந் துள்ளது. இம் மண்டபம் 18ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டுள்ளது. கோபுர வாயிலையும் மகா மண்டபத்தையும் இம் மண்டபம் இணைக்கிறது.

இக்கோயிலில் காரணாகம முறையில் பூஜைகள் நடைபெறுகின்றன.



# சிற்பக்கலை அறிமுகம்

முதலில் சிற்பக் கலையில் கையாளப்படும் உரிய கலைச் சொற்களை ஓரளவு தெரிந்து கொள்வது பயன் தரும்.

ஒரு சிலையின் முடிமுதல் திருப்பாதங்கள் வரை உள்ள உடல் அமைப்பு பற்றியும், உடைகளைப் பற்றியும் அணி மணிகளைப்பற்றியும் கலைத்துறையினர் கையாளும் பெயர் முறைகளை முதலில் காண்போம்.

தலையில் விளங்கும் மகுடம், முடி என்றும் கிரீடம் என்றும் அழைக்கப்படுகிறது. முடிகளில் பலவகை உண்டு.

ஜடாமகுடம், கரண்ட மகுடம், கிரீட மகுடம், ஜடாபாரம், ஜடாபந்தம் என்ற பெயர்களுடன் வழங்கப்படும்.

இவை தெய்வங்களுக்கு ஏற்ப வேறுபடும்.

இந்த முடிகளின் அமைப்பை யொட்டிப் பக்க வாட்டில் விரிசடையும், பின் தோள்களில் தாழ்சடையும், தலையின் பின்புறம் சிரச் சக்கரமும் தலையலங்காரமாக உருவாக்கப்படும்.

காது அமைப்புகளிலும் பலவித அணிகளைக் கலையழகுக்காகக் காட்டுவர்.

மேற்காதுகளில் உள்ள செருகப்பட்ட மலரைச் செவிப்பூ என்பர். காதுகளின் மேலிருந்து கீழாக, கொப்பு, தட்டை, தகடு, தொங்கல், மாட்டல் முதலியவை அமைப்பதுண்டு.

காதுகளை அழகுபடுத்தும் அணிகள் குழை, குண்டலங்கள், தண்டட்டி, தோடு, தொங்கல் எனப் பலவகை உண்டு. காது குண்டலங்களைப் பல்வேறு வடிவங்களில் அமைப்பர்.

அவை மகர குண்டலங்கள், பத்ரகுண்டலங்கள், புஷ்ப குண்டலங்கள், சிம்ம குண்டலங்கள், பிரேத குண்டலங்கள், நாக குண்டலங்கள் எனப்படும்.

தோள்களில் அழகு படுத்திக் காட்டுவதற்கென்றே அமைக்கும் மாலையைத் தோள்மாலை என்றும் வாகுமாலை என்றும் கூறுவர்.

கழுத்தில் காட்டும் பல அணிகளும் அறியத் தக்கவை. மங்கலநாண், பொட்டுமணி, உள்கழுத்து மாலை, அட்டிகை, கண்டசரம், சரடு, பதக்கம், முத்தாரம், மணிவடம், அரும்புச்சரம், சரப்பளி, கொத்துச் சரப்பளி, சவடி முதலியவை உள்ளன. இவற்றை ஆண் பெண் உருவங்களுக் கேற்ப அமைப்பது வழக்கம்.

பெண் சிற்பங்களின் மார்புக்கு மேல் கச்சை அல்லது குஜபந்தம் எனக் கூறப் பெறும் ஆடை யமைப்பைக் காட்டுவர்.

புத்தர் போன்ற ஆண் உருவச் சிலைகளுக்கு மேல் தோளில் ஆடை காட்டப் பெறும்.

ஏனைய ஆண் உருவச் சிலைகளுக்கு இடது தோளிலிருந்து பூணூலை வடிவமைப்பர். இதை எளிய புரிநூலாகவும் முத்துக்கள் அணி செய்யும் நூலாகவும் (முக்தா யக்ஞோபவீதம்) காட்டுவ துண்டு.

தேவ குலப் பெண்களுக்கும் மார்பில் பூணூல் அல்லது சன்னவீரம் என்னும் குறுக்காகத் தொங் கும் நூல் காட்டப்பெறுவதுண்டு.

மேல் கைகளில் (புஜங்கள்) அலங்கரிக்கும் அணிகளை அனந்த வளை, இலைக் கருக்கு முகப் புடைய தோள் வளை, பாஜி பந்தம், கேயூரம் எனக் குறிப்பிடுவர்.

முழங்கையைச் சுற்றிலும் கடகம் என்னும் வளையும் அணிவிக்கப் பெறும்.

முன் கையில் சூடகம், காரை, காப்பு, சங்கு வளை, பொன்வளை, கைவளை, பவழவளை, மணி வளை, முத்துவளை, செருகு வளை முதலிய வற்றைத் தக்கவாறு அணிசெய்வர்.

புறங்கையில் வங்கியும், கட்டை விரலில் உருட்டு எனும் மோதிரமும் பிற விரல்களில் வங்கி மோதிரமும் வாளைப் பகுவாய்யான மோதிரங்களும் காட்டப்பெறும்.

ஆணுருவங்களுக்கு இடுப்பைச்சுற்றிலும் அரை ஞாண், அரைப்பட்டிகை, தாரகச்சுமை, இடைவார் முதலிய ஆடையணிகளை அலங்கரிப்பர்.

பெண்கள் சிலையுருவுக்கு, இடையில் இடை யாரம், அரைமணி, மேகலை, ஒட்டியாணம், மலர் முகப்புக் கச்சை முதலியனவும் காட்டப்பெறும்.

தொடைமீது முத்துத் தாமங்கள் தவழ விடுவர். இதனைக் குறங்குசெறி என்று கூறுவர்.

ஆண்களின் அரையைச் சுற்றிலும் சிம்ம முகம் அல்லது கீர்த்தி முக முகப்புடைய உடைக்கட்டு, பீதாம்பரம் அல்லது வட்டுடை, கீழாடை முதலா னவை அமைப்பர். இதனை அந்தரீயம் என்று கூறுவர்.

பெண்களின் இடையில் மலர் முகப்புடைய கச்சையோ, அல்லது பூவேலைப்பாடுள்ள உடை அல்லது மடிப்புகளோடு கூடிய உடையோ அல்லது சேலையோ காட்டப்படுவது வழக்கம்.

சிலைகளின் கால்களில் கழல், காப்பு, ,வங்கி, தண்டை, சதங்கை, சிலம்பு, பாடகம், பாதசரம் முதலியவையும் விரல்களில் மெட்டியும் அலங் கரிப்பர்.

இவ்விதம் முடிமுதல் அடிவரை காட்டப் பெறும் ஆடை அணி மணிகள் அமைக்கும் முறையும் அணி களின் வகையும் பல்லவர்காலம் எனப்படும் கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதலே இருந்து வருவதைச் சிலைகளில் பார்க்கிறோம். எனினும் மிகப் பழங் காலம் முதலே இம்முறை இருந்து வந்ததைச் சங்க நூல்களால் அறிகிறோம்.

பல்லவர்காலப் பெண் உருவச் சிலைகளில் காணப்பெறாத மூக்குத்தி என்னும் நகை விஜய நகரத்துச் சிற்பக் கலைகளில் (15 ஆம் நூற்றாண்டு முதல்) காணப்படுகிறது.

மேலும் 14, 15 ஆம் நூற்றாண்டளவில் கூந்தலை, நீண்ட சடையாகப் பின்னிக் காட்டியும், அதில் கல்பதித்த திருகுப்பூவும், சடையின் தொங்க லில் பல்வகைக் குஞ்சங்களும் அமைத்துக் காட்டும் முறை தோன்றிவிட்டது எனலாம்.

பழையகாலப் பெண் சிற்பங்களில், தலையில் முன்பக்கங்களில் சந்திரப்பிறை சூரியப்பிறை எனும் அணிகள் காட்டப்பட்டுள்ளன. தலை நடுவகிட்டில் பூறாப்பாளை எனும் சரமும் (அணி) அதன் முன் புறம் நெற்றிமீது தொங்கும் நிலையில் தொய்யகம் எனும் பதக்கம் காட்டப் பெற்றுள்ளன. மேலும், பொதுவாக, நெற்றிமேல் இருபுறமும் படர்ந்த வாறு கல் வைத்த நெற்றிப்பட்டம், முத்துப்பட்டம் இரத்தினப்பட்டம் முதலிய பொற்சரங்களை அணி செய்விப்பதும் ஒரு கலை மரபாகும்.

தெய்வச் சிலைகளை உருவாக்கும் வகையிலும் பலவித முறைகள் உள்ளன.

நின்ற கோலம், அமர்ந்த கோலம், கிடந்த (படுத்த) கோலம் என மூவகையிலும் அமைப்பர்.

மேலும், நேராக நிற்பது, உடலை ஒடித்து ஒயிலாக நிற்பதுபோல் காட்டுவது, இரண்டு வளைவு (துவியங்கம்), மூன்று வளைவாகக் காட்டுவது திரிபங்கம் எனப் பல தோற்றங்களில் உருவாக்கிக் காட்டுவது சிறந்த கலைப்படைப்பா யுள்ளது.

தெய்வங்களின் நிலைகளுக்கேற்ப அவை அமரும் ஆசனங்களும் மாறுபட்டுத் தோன்றுமாறு அமைப்பர்.

ஆசன நிலைகளில் சுகாசனம், வீராசனம், யோகாசனம், பத்மாசனம், உட்குடியாசனம் எனப் பலவகைகளைக் காட்டுவர்.

சிற்பங்களின் கரங்களை எளிமையாக அமைக்காமல், முத்திரைகள் எனும் பாவனைகள் காட்டுவதாக அழகுற அமைப்பது சிற்ப மரபாக இருந்து வருகிறது.

சான்றாக, அபயமுத்திரை, வரதமுத்திரை, கடகமுத்திரை, வேழ முத்திரை, அர்த்த சந்திர முத்திரை, சின்முத்திரை, வியாக்யான முத்திரை, கத்தரி முத்திரை, சூசி முத்திரை, தர்ஜன்ய முத்திரை, தாடகமுத்திரை, விஸ்மய முத்திரை, சிம்ம கரண முத்திரை, தமரு முத்திரை, தியான முத்திரை முதலிய பல முத்திரைகளைக் காட்டியுள்ளனர்.

சிலையின் கைகளில் ஏந்தும் ஆயுதங்களுக்கு ஏற்பவும், முகத்தில் காட்டும் பாவங்களுக்கு ஏற்பவும் முத்திரைகள் அமைப்பது வழக்கம்.

இந்தக் கலை மரபுக் குறிப்புகளை மனத்தில் கொண்டு இக் கோயிலில் உள்ள சிற்பங்களைக் கண்டு உணர்ந்து சிற்பத்திறனை வியந்து போற்றுவோமாக.

# செப்புத் திருமேனிகள்

வளவனூர் ஸ்ரீ ஜகந்நாத ஈசுவரர் கோயிலில் வழிபாட்டில் 23 செப்புத் திருமேனிகள் உள்ளன. இவற்றில் 19 செப்புத் திருமேனிகள் சிவன் கோயிலுக்குரியவை.

தவிர, அய்யனார் கோயிலுக்குரிய 3 படிமங்களும், மாரியம்மன் கோயிலுக்குரிய ஒரு படிமமும் இக் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## செஞ்சி நாயக்கர் காலம்

இச் செப்புத் திருமேனிகளின் உருவ அமைப்பு, முகப் பொலிவு, ஆடை அணிகளின் தன்மை, கைகளில் ஏந்தியுள்ள ஆயுதங்கள் இவைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், அவை செய்தளிக்கப்பட்ட காலத்தை அறியலாம்.

இக் கோயிலிலுள்ள செப்புத் திருமேனிகளில் பிரதோஷ நாயகர் என்ற பெயரில் வழிபடும் சிவனது படிமமே காலத்தால் பழமை வாய்ந்தது. இது கி. பி. 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

சிவனது தேவியான பிரதோஷ நாயகி சிலையானது, முந்தைய சிலையைவிடக் காலத்தால் ஒரு நூற்றாண்டு பிற்பட்டது எனலாம்.

இதனையடுத்து இக் கோயில் பாதுகாப்பிலுள்ள அய்யனார், பூரணி, புஷ்கலை ஆகிய செப்புத் திருமேனிகளும் 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்த படிமங்களென அறிகிறோம்.

மேற்கூறிய நான்கு சிலைகளும் இப் பகுதியை ஆட்சி செய்த செஞ்சி நாயக்கர் காலத்தவையாகும்.

இவற்றை முதற் காலக் கட்டத்தைச் சார்ந்த செப்புத் திருமேனிகளாகக் கருதலாம்.

இக் கோயிலில் முதல் திருப்பணி தொடங்கிய காலத்தில் இப் படிமங்கள் செய்தளிக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

**பிற்காலம்**

இக் கோயிலிலுள்ள சோமாஸ் கந்தர், தனி அம்மன், சந்திரசேகரர். சந்திரசேகரர் அம்மன், விநாயகர், சண்டிகேஸ்வரர், நடராஜர், சிவகாமி, மாணிக்கவாசகர், சுந்தரர், அஸ்திர தேவர் ஆகிய செப்புப் படிமங்கள் கி. பி. 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவை.

இக் கோயிலில் உள்ள சுப்பிரமணியர், வள்ளி, தேவசேனை ஆகிய திருமேனிகள் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை. மேற்

குறித்த செப்புத் திருமேனிகள் அனைத்தும் இரண்டாவது காலக் கட்டத்தைச் சார்ந்தவையாகக் கருதலாம்.

இக் கோயிலில் நடந்து முடிந்த இரண்டாவது திருப்பணியின் போது செய்தளிக்கப்பட்டவையாகக் கருதலாம்.

இனி, இந்தச் செப்புத் திருமேனிகளின் கலை வடிவ அமைப்புகளைப் பற்றிய விளக்கங்களை அறிதல் வேண்டும். காலந்தோறும் வளர்ந்து வரும் மற்ற கலைகளைப் போலவே படிமக் கலையும் கலைஞர்களால் மாற்றம் பெற்று வந்திருக்கிறது.

இந்தக் கலை வடிவ அமைப்பு முறை பல்லவர் பாணியைச் சார்ந்ததென்றும், முற்காலச் சோழர் கலைப் படைப்பு என்றும், பிற்காலச் சோழர் கலை வளம் என்றும், பாண்டியர், விஜய நகரர், மராட்டியர், செஞ்சி நாயக்கர், நகரத்தார் முதலியோரின் காலத்தைச் சார்ந்தவை என்றும் கலை வரலாற்றில் கூறப்படுகின்றது.

வளவனூர்க் கோயில் சிலைகளின் காலத்தை அறிந்தோம். இனிக் கலை வளத்தைக் காண்போம்.

## பிரதோஷ நாயகர்

இவ்வுருவம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது.

சிவனது மேற் கைகள் இரண்டும் மழுவையும் மானை யும் பற்றியுள்ளன. கீழ்க் கைகள் அபயவரத முத் திரையில் அருபாலிக்கின்றன.

ஜடாட மகுடம் தலையிலும் சிர சக்கரம் பின் தலையிலும் அலங்கரிக்துன்றன.

வலது செவியில் மகரக் குழையும் இடது செவி யில் ஓலைக் குழையுடன் மகரமும், அலங்கரிக்கக் காண்கிறோம்

சரப்பளி,முத்தாரம்,பதக்கம் கோத்த கழுத்தணி ஆகியன மார்பை அலங்கரிக்கின்றன.

மேற் கையில் தோள் வளையும், முன் கையில் காப்பும், மார்பில் பூணூலும், மேல் வயிற்றில் உதரக் கச்சையும், இடையில் முன்புறம் கீர்த்திமுகக் கச்சையும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை கோடிட்ட ஆடையும், பக்கங்களில் சரிந்து தொங்கும் ஆடைக்கட்டும், காலில் கழலும் பாதசர மும் சிவனை அலங்கரிக்கக் காண்கிறோம்.

முழுதும் கனமாக வார்க்கப்பட்ட இத் திருமேனி வெண்கல நிறத்தில் காட்சியளிக்கிறது. இக் கோயி லிலுள்ள செப்புத் திருமேனிகளில் இதுவே தொன் மையானது.

செஞ்சி நாயக்கர் கலையை இது வெளிப்படுத்தி நிற்கிறது. காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

## பிரதோஷநாயகர் அம்மன்

தாமரை இருக்கையின் மீது வலது காலை முன் வைத்து இடது காலை ஊன்றி, இரு கைகளோடு நின்ற நிலையில் இந்த அம்மன் சிலை வார்க்கப் பட்டுள்ளது.

வலது கையில் நீலோத்பல மலரைப் பிடித்துள் ளது. இடக்கை தாழ்கையாகக் காட்டப்பட்டுள்ளது.

கரண்ட மகுடம், மகரக் குழைகள், பதக்கம் கோத்தகழுத்தணி, மணியாரம், முத்தாரம் பூணூல், கேயூரம், தோள்வளை, காணப்பெறுகின்றன.

காப்பு, கைவளை, மலர் முகப்புடைய இடைக் கச்சை, வங்கி, பாதசரம் ஆகிய அணிகளும் உமையை அலங்கரிக்கின்றன.

பிரதோஷ நாயகரைவிட நாயகியின் இச்சிலை ஒரு நூற்றாண்டுக்கும் பிற்பட்டது எனலாம்.

இதன் பீடம் பிற்காலத்தில் பித்தளையால் செய்து இணைக்கப்பட்டுள்ளது. காலம் கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. செஞ்சி நாயக்கர் கலையை உடையது.

## மாணிக்க வாசகர்

இவ் வுருவம் தாமரை மீது இரு கைகளுடன் நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது.

வலக்கை உருத்திராட்ச மாலையைப் பிடித்த நிலையில் சின்முத்திரை காட்டி நிற்கிறது.

இடக்கை, எழுத்துப் பொறித்த ஏட்டை ஏந்தியுள்ளது. மழித்த தலையைச் சுற்றிலும் உருத்திராட்ச மாலை அலங்கரிக்கின்றது.

காதில் உருத்திராட்ச மணியும், கழுத்தில் பதக்கம் கோத்த உருத்திராட்ச மணியாரமும் அலங்கரிக்கின்றன.

தோளில் கேயூரமும், முன் கையில் காப்பும், காலில் தண்டையும், பாதசரமும்அலங்கரிக்கின்றன. இடது மார்பில் பூணூல் காட்டப்பட்டுள்ளது.

இடுப்பிலிருந்து கீழ்த் தொடை வரை ஆடைக் கட்டு வரியிட்ட நிலையில் வனப்பூட்டுகிறது. இச் சிற்பத்தின் உருவ அமைதியைக் கொண்டு,'கி. பி. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தது எனக் கருதலாம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

திருவாமூரில் பிறந்த சுந்தரர் தாமரைப் பீடத்தின் மீது ராஜ உடையில் வலக்கையில் மலர் ஏந்தி, இடக்கையை நீண்ட தண்டின் மீது ஊன்றிய நிலையில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.

தலையில் உயர்ந்த ராஜமகுடம் அலங்கரிக்கின்றது. மகரக் குழைகள், முத்தாரம், மணியாரம், பூணூல் 'உதரபந்தம், கேயூரம், தொடைவரை

இடைக்கச்சை, பாதசரம் ஆகிய அணிகள் சுந்தரரை அழகு செய்கின்றன.

இடதுகையின் கீழுள்ள தண்டு, கீர்த்தி முகம் அணி செய்யும் முகப்புடையதாகக் காணப்படு கின்றது.

முழுதும் கனமாக வார்க்கப்பட்ட இச் செப்புத் திருமேனியின் உருவ அமைப்பையும் ஆடை அணி களையும் கொண்டு இது கி. பி. 18 ஆம் நூற்றாண் டைச் சார்ந்தது எனக் கருதலாம்.

## நடராஜர்

நீள் சதுர பீடத்தில், விளையாடும் கோலத்தில் மண்டியிட்டுக் கிடக்கும் முயலகன் முதுகின் மீது வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கி ஆடும் நிலையில், நான்கு கைகளுடன் நடராஜர் உருவம் வார்க்கப்பட்டுள்ளது.

மேல் வலக்கையில் உடுக்கையையும் இடக்கை யில் அனலையும் பிடித்த நிலையில், கீழ்வலக்கை அபய முத்திரை காட்டுகிறது.

அந்தக் கையில் முன் கை மீது ஆடும் அரவம் ஒன்று காட்டப்பட்டுள்ளது.

கீழ் இடக்கை, உடலுக்குக் குறுக்கே நீண்டு நிற்கிறது.

தலைமீது கொக்கின் இறகும் கபாலமும் விசிறியை ஒத்த நிலையில் அலங்கரிக்கின்றன.

நெற்றியில் இரத்தினப்பட்டமும் காதுகளில் மகர பத்ரக் குண்டலங்களும், கழுத்தில் கண்ட மாலையும் மார்பில் சரப்பளியும், தோளில் கேயூரமும், முன் கையில் காப்பும், வலது முழங்காலில் கிண்கிணியும், காலில் கழலும் சிலம்பும் ஆடும் பெருமானை அழகு செய்கின்றன.

கைகளை வீசி ஆடும் நிலையில் இடையில் உள்ள ஆடைக்கட்டுகள் பக்கங்களில் பறந்து நிற்கின்றன.

இடையில் புலித்தோல் ஆடை அலங்கரிக்கின்றது.

நடராஜரைச் சுற்றிலும் வட்டமான திருவாட்சியும், அதைச் சுற்றிலும் 21 சுவாலைகளும் காட்டப்பட்டுள்ளன.

இச் சிலையின் உருவ அமைப்புக் கொண்டு இதனைக் கி. பி. 18 ஆம் நூற்றாண்டாகக் கருதலாம்.

## சிவகாமி அம்மன்

தாமரை இருக்கைமீது இடையை வலப்புறமாகச் சற்று வளைத்து நின்ற நிலையில், வலக்

கையில் அல்லிமலர் ஏந்தி, இடக்கை தாழ்கையாகக் கொண்டு காட்சியளிக்கிறது.

கரண்ட மகுடம் தலையிலும், சிரச்சக்கரம் பின் தலையிலும், மகரக் குழைகள் காதிலும், முத்தாரம், பொட்டு மணிகோத்த மணி ஆரம் கழுத்திலும், சன்னவீரம் மார்பிலும், எளிய இடைக்கச்சை இடையிலும், தண்டை காலிலும் சிவகாமியை அலங்கரிக்கக் காண்கிறோம்.

ஆடை அணிகளின் தோற்றமும் நிற்கும் நிலையும் கொண்டு இதனைக் கி. பி. 18 ஆம் நூற்றாண்டாகக் கருதலாம்.

**அய்யனார்**

இவ்வூரின் புறத்தே உள்ள அய்யனார் கோயிலுக்கு உரிய செப்புச் சிலையையும் இக் கோயிலில் கண்டு களிக்கலாம். பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வார்க்கப்பட்ட அய்யனாரும், பூரணி, புஷ்கலை ஆகிய இரு தேவியரும் தொன்மைச் சிறப்பும், கலைச் சிறப்பும் மிக்கதாய் விளங்குகின்றன.

தனித்தனிப் பீடத்தில் இவை அமைந்திருப்பினும் அனைத்தும் செஞ்சி நாயக்கர் காலத்தவையாகக் காட்சியளிக்கின்றன.

அய்யனார் உருவம் தாமரைப் பீடத்தின் மீது இடது காலைச் சாய்வாகக் குத்திட்டு, வலது காலைத் தொங்கவிட்ட நிலையில் இரு கைகளுடன் பெருமிதமாகக் காட்சியளிக்கிறது.

அய்யனாரின் வலது கை இரு மடிப்போடு கூடிய நீண்ட செண்டைப் பிடித்துள்ளது.

இடக்கை முழங்கால் மீது அமைந்து முன்புறம் நீண்டுள்ளது.

அய்யனாரின் தலையை விரிந்த ஜடாபாரம் அலங்கரிக்கிறது. ஜடாபாரத்தின் முன்புறம் இரு மகரங்களுக்கிடையே பூரிமம் வனப்போடு செருகப் பட்டுள்ளது.

ஜடாபாரத்தின் விளிம்புகளில் சுருண்ட கேசங் கள் இரு வரிகளில் வனப்போடு காட்டப்பட்டுள்ளன,

நெற்றியைச் சுற்றிலும் ரத்தின்ப் பட்டம் அலங் கரிக்க, காதுகளில் வட்டமான ஓலைக் குழைகள் அழகு செய்கின்றன.

கழுத்தில் சரப்பளியும் கற்களும் மணிகளும் கோத்த இரு கழுத்தணிகள் அழகு செய்கின்றன.

இடது மார்பிலிருந்து ஓடும் பூணூல் உதரக் கச்சையின் மேல் விழுந்து கீழ் வயிற்றை அடை கிறது.

வேலைப்பாடு மிக்க உதரக் கச்சை மேல் வயிற் றில் கட்டப்பட்டுள்ளது. இடையிலிருந்து கீழ்த் தொடை வரை எளிய ஆடையும், காலில் பாதசர மும் அய்யனாரை அணி செய்கின்றன.

பரந்த முகமும், அகன்ற நெற்றியும், உயர்ந்த புருவமும், விரிந்த கண்களும், எடுப்பான மூக்கும்

சற்றுப் பிரிந்து முறுவலிக்கும் உதடுகளும் கொண்டு தலைவனை ஒத்துப் பெருமிதமான முகபாவத்துடன் அய்யனார் வடிவம் வார்க்கப் பட்டுள்ளது.

அய்யனாரின் உருவ அமைதியும், உடற் கட்டும், ஆடை அணிகளும் ஆயுதமும் கொண்டு இதனைக் கி. பி. 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த படிமமாகக் கருதலாம்.

அய்யனாரின் இரு புறங்களிலும் பூரணியும், புஷ்கலையும் அழகிய உருவாகத் தனிப் பீடத்தில் வீற்றிருக்கும் செப்புச் சிலைகளும் நேரில் கண்டு மகிழத் தக்கவையாகும்.

## பூரணி

இவ்வம்மன் அய்யனாரின் தேவிகளில் ஒருவர். இப்படிவம், தாமரைப் பீடத்தின் மீது இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு, இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில்காட்சியளிக்கிறது.

இடக்கை தாமரை மலரைப் பிடித்தும், வலக் கை, தாமரைப்பீடத்தின் மீது அமைந்தும் உள்ளன

தலையில் கேசபந்தமும் பின்புறம் வட்டமான சிரசக்கரமும், காதுகளில் வட்டமான ஓலைக்குழை யும் தோளில் வாகு மாலையும், கழுத்தில் பொட்டு மணி, கண்டமாலை, கற்கள் பதித்ததைஒத்த பொன் நாணும் அலங்கரிக்கின்றன.

மார்பில் உள்ள தனங்களின் மீது அழகிய மாரக்கச்சை காட்டப்பட்டுள்ளது.

தனங்களின் நடுவே சன்னவீரம் காட்டப் பட்டுள்ளது.

மேல் கைகளில் இலைக் கருக்கு முகப்புடைய தோள் வளையும், முன்கையில் காப்பும், காலில் வங்கியும், சிலம்பும், பாதசரமும் அலங்கரிக்கின்றன.

இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ் வரை உடலை ஒட்டிய நிலையில் ஆடைக்கட்டு அலங் கரிக்கிறது.

கழுத்து இடப்புறம் சாய்த்த நிலையில் மலர்ந்த முகத்தோடு பூரணியின் முகம் பொலிவூட்டுகிறது.

முழுதும் கனமாக வார்க்கப்பட்ட இச் செப்புத் திருமேனி, கி. பி. 16ஆம் நூற்றாண்டைச்சார்ந்தது. செஞ்சி நாயக்கர் காலப் படிமக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது.

## புஷ்பகலை

இந்த அம்மன் அய்யனாரின் மற்றொரு தேவி யாவார், நீண்ட தாமரைப்பீடத்தின் மீது வலது காலை மடித்து இடது காலைத் தொங்கவிட்ட நிலையில் இரு கைகளுடன் வார்க்கப்பட்டுள்ளது.

வலக்கை கடகமுத்திரையில் அல்லி மலரைப் பிடித்துள்ளது. இடக்கை தாமரைப் பீடத்தின் மீது ஊன்றிய நிலையில் உள்ளது.

கழுத்தை வலப்புறம் சாய்த்து மலர்ந்த முகத் தோடு தோன்றும் இத் தேவியைக் கேசபந்தம் சிர

சக்கரம், மகரக் குழைகள், தோள்மாலை எனும் வாகு மாலை, இலைக் கருக்குடன் கூடிய கேயூரம், காப்பு, பூணூல், இடைக் கச்சை, வங்கி, சிலம்பு, பாதசரம் ஆகிய அணிகலன்கள் அலங்கரிக்கின்றன.

கனமாக வார்க்கப்பட்டுள்ள இச் செப்புத்திரு மேனி, நாயக்கர் காலத்தியது; கி. பி. 16 ஆம் நூற்றாண்டு.

அய்யனார், பூரணி, புஷ்கலை ஆகிய மூன்று செப்புச் சிலைகளிலும் ஒரேகாலத்தில் ஒரே ஸ்தபதி யின் கைவண்ணத்தில் வெளிப்பட்டுள்ளன.

**ஸ்கந்தர்**

சிவனுக்கும் உமைக்கும் நடுவே, தாமரைப் பீடத்தின் மீது இரு கால்களை ஊன்றி இளம் பிள்ளை வடிவில் ஆடையற்ற திருவுருவாய், குழந்தை முருகனின் வடிவம் வார்க்கப்பட்டுள்ளது.

இருகைகளிலும் விரிந்த தாமரை மலரைப் பற்றியுள்ள குழந்தை முருகனின் இளந் தலையைச் சடை மகுடமும், சிரசக்கரமும் அலங்கரிக்கின்றன.

காதில் வட்டக்குழையும் கழுத்தில் ஆரமும் மலர்கள் கோத்த மார்புஅணியும் சன்னவீரமும், இளந் தோளில் முத்துக் கோத்த தோள்வளையும் 'முன்கையில் காப்பும், இடையில் பல்வகை மணி களும் சதங்கையும் கோத்த அரைஞாணும், காலில் கழலும் பாதசரமும் அலங்கரிக்கின்றன.

இவ்வுருவம் கி.பி. பதினாறாம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## சண்டிகேஸ்வரர்

இப் படிவம் தாமரைப்பீடத்தின் மீது இரு கை கூப்பிப் பணிவோடு நின்ற கோலத்தில் வார்க்கப் பட்டுள்ளது வலது முன் தோளில் மழு எனும் ஆயுதம் சாத்தப்பட்டுள்ளது.

சடை மகுடம், சிர சக்கரம், மலர்கள் கோத்த மார்பு அணி, வட்டக்குழை, தோள்வளை, கைவளை காப்பு, பூணூல் இடைக்கச்சை, பாதசரம் பலவும் கொண்டு பக்திப்பரவசத்தோடு வணங்கி நிற்கும் சண்டிகேஸ்வரரை அலங்கரிக்கின்றன.

இச் செப்புத் திருமேனி கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## அஸ்திர தேவர்

திரிசூலவடிவுடைய அஸ்திரதேவரின் பீடத்தின் முன்புறம் சிவன் காளைவாகனத்தோடு காட்சி யளிக்கும் நிலையில் படிமம் வார்க்கப்பட்டுள்ளது.

மழு, மான் ஏந்தி நிற்கும் சிவனது வலது கை அபயம் காட்ட, இடது கை தொடைமீது அமைந்துள்ளது.

சிவனது இடையைப் புலித்தோல் ஆடை அலங்கரிக்கிறது.

சிவனது பின்புறம் அவரது வாகனமான விடை வனப்போடு காட்சியளிக்கிறது. இப்படிவம் கி.பி.18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## பராசக்தி

இப் படிவம்சதுரமான பீடத்தின் மீதுள்ள வட்டமான இருக்கையில் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது.

அம்மனின் மேல் வலக்கை சங்கு சக்கரத்தைப் பிடித்தும் இடக்கை பாசத்தைப் பிடித்தும் நிற்க, கீழ்க்கைகள் இரண்டும் அபயவரதம் அளித்து அருள் பாலிக்கின்றன.

சடாமகுடம் தலையிலும் சிரச்சக்கரம் பின்தலையிலும் அலங்கரிக்கின்றன. மற்றும் மகரக்குழைகள், மணியாரம், பொட்டுக் கோத்த முத்தாரம், பூணூல் கேயூரம், காப்பு, எளிய இடைக்கச்சை, பாதசரம் யாவும் தேவியை அலங்கரிக்கின்றன.

பரந்த முகமும் விரிந்த கண்களும் நீண்ட நாசியும் திலகமிட்ட நுதலும் கொண்டு தேவியின் முகம் பொலிவோடு காட்சியளிக்கிறது.

இப் படிவம் கி.பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இக் கோயிலிலுள்ள அண்மைக்கால செப்புத் திருமேனிகளில் இது குறிப்பிடத் தக்கது.

ஆடிப் பூரத்தின் போதும் நவராத்திரி விழா வின் போதும் இவ் அம்மனுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

### சந்திரசேகரர் அம்மன்

இந்தப் படிமம் வலது கை கடக முத்திரை யைக் கொண்டு இடது கை லோல முத்திரையில் தொங்கும்கரமாகக் கொண்டு, தாமரை இருக்கை மீது நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது.

உயர்ந்த மகுடம், மகரக் குழைகள், மலர் கோத்த மார்பணி, சவடி, பூணூல், கேயூரம், பாத சரம் ஆகியன அணிந்து இடையிலிருந்து முழங் காலுக்குக் கீழ்வரை எளிய கச்சை அணிந்து காட்சி யளிக்கிறது. காலம் 18-19 ஆம் நூற்றாண்டு.

### விநாயகர்

அங்குசம் பாசம் தந்தம் ஆகிய ஆயுதங்களை யும் மோதகம் முதலிய பொருளையும் நான்கு கரங் களில் ஏந்தி ஐந்தாவது கரமான துதிக்கையும் இடம்புரியாகக் கொண்டு மோதகத்தைப் பற்றி நிற்கிறது இச்சிலை.

ஆனைமுகத்தானின் தலையைக் கரண்டமகுடம் அலங்கரிக்கிறது. இரு காதுகளில் செவிப்பூக்கள் செருகப்பட்டுள்ளன. காதுகள் இரண்டும் விரிந்த இலைகளை ஒத்துக் காட்சியளிக்கின்றன.

கண்கள் பக்கவாட்டில் காட்டப்பட்டுள்ளன. யானைமுகத்தின் வலது தந்தம் உடைந்துள்ளது. மலர் வடிவுடைய மார்பு அணி, மணியாரம், அரவத்தால் ஆன பூணூல், கேயூரம் காப்பு, பாதசரம் ஆகிய அணிகள் விநாயகருக்கு வனப்பூட்டுகின்றன. பெருத்த வயிற்றைச் சுற்றிலும் உதர பந்தம் இறுகக் கட்டப்பட்டுள்ளது.

இடையில் மலர் முகப்புடைய கச்சை கீழ்த் தொடைவரை அழகு செய்கிறது. இப் படிமத்தின் உருவ அமைதி, ஆடை அணிகள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு கி.பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இதனைக் கருதலாம்.

### சோமாஸ்கந்தர்

சோமாஸ்கந்தர் குழுவிலுள்ள சிவனது படிமம் தாமரை இருக்கை மீது வலது காலைத் தொங்க விட்டு இடது காலை மடித்து அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் வார்க்கப்பட்டுள்ளது.

மேல் வலக்கையில் பெரியமழு ஆயுதம் கத்திரி முத்திரையில் காட்டப்பட்டுள்ளது.

இடக்கையில் துள்ளிக் குதிக்கும் மான் முகம் சிவனது இடது செவியை நோக்கிப் பார்த்த வண்ணம் நிற்கிறது.

கீழ்வலக்கை அபய முத்திரையில் அருள் பாலிக்கும் கையாக அமைந்துள்ளது. இடக் கை சிம்ம கர்ண முத்திரையில் அமைந்துள்ளது.

உயர்ந்த ஜடாமகுடம் தலையிலும், வட்டமான சிரசக்கரம் பின்தலையிலும் அலங்கரிக்கின்றன. வலது காதில் மகரக் குழையும், இடது காதில் மலர்கள் அணி செய்யும் வட்டக் குழையும் வனப்பூட்டுகின்றன.

கழுத்தில் மெல்லிய பொன் நாணும் மலர்கள் பொறித்த அகன்ற மார்பணியும் அழகு செய்கின்றன. தோள்களில் வாகுமாலை வீழ்ந்துள்ளது.

இடது மார்பில் பூணூல் காட்டப்பட்டுள்ளது. வலது மார்பில் திருமாலுக்குக் காட்டப்படும் ஸ்ரீவத்சம் என்னும் குறியீட்டைப் போல முக்கோண வடிவில் காட்டப்பட்டுள்ளது. இது இச்சிலையில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேல் வயிற்றில் வேலைப்பாடு மிக்க உதரப் பந்தமும், இடுப்பிலிருந்து கீழ்த்தொடை வரை புலித்தோல் ஆடையும், வலது முழங்காலின் கீழ் கிண்கிணியும், காலில் பாதசரமும் சிவனை அலங்கரிக்கின்றன.

பரந்த முகமும் விரிந்த தோளும் கொண்டு நிமிர்ந்த நிலையில் வீற்றிருந்து அருள்பாலிக்கிறார். இச்சிலை கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும்.

## பிரியாவிடை

சிவனது இடப்புறமுள்ள உமையன்னை தடித்த தாமரை இருக்கையில் இரு கைகளோடு அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறாள்.

அவளது வலக் கை கடக முத்திரையிலும், இடக் கை வரத முத்திரையில் வழங்கும் கரமாகவும் காட்சியளிக்கிறது.

கரண்ட மகுடம், சிரச்சக்கரம், மகரக் குழைகள், வாகு மாலை, கொத்து மணி, கண்டசரம், மலர்ச் சரம் தொடுத்த கழுத்தணி, பூணூல், சன்னவீரம் இலைக் கருக்கு வடிவில் தோள்வளை, காப்பு, இடைக் கச்சை, வங்கி, பாதசரம் ஆகிய அணிகள் பிரியாவிடையை அலங்கரிக்கின்றன.

பரந்த முகமும், மலர்ந்த கண்களும் கொண்டு அருள் பாலிக்கும் இவ் வடிவம் கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும்.

## தனி அம்மன்

இப் படிமம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் இடையை வலப்புறமாக ஒடித்து நின்று இரு கைகளுடன் காட்சியளிக்கிறது.

உமையின் வலக் கை கடக முத்திரையிலும், இடக் கை லோல முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன.

பாதசரம், வங்கி, வரியிட்ட இடைக்கச்சை, மேகலை, சன்னவீரம், மலர் பதித்த விரிந்த கழுத்தணி, திருமாங்கல்யம், காப்பு, கைவளை, தோள் வளை, கேயூரம், வாகு மாலை, மகரக் குழை, செவிப்பூ, சிரசக்கரம், கரண்ட மகுடம் ஆகிய அணிகள் அணி செய்ய திரிபங்கியாக நின்ற கோலத்தில் முகம் மலரப் பொலிவோடு அம்மன் காட்சியளிக்கிறார்.

இத் தேவியின் வடிவமைப்பு, சோமாஸ்கந்தர் குழுவை ஒத்து விளங்குகிறது.

இவ் வடிவமைப்பு, அணிகளும் ஆடைகளும் சோமாஸ் கந்தர் குழுவை ஒத்து விளங்கக் காண்கிறோம்.

எனவே இச் செப்புச் சிலையும் கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததெனக் கருதலாம்.

**மாரியம்மன்**

வளவனூர் மாரியம்மன் கோயிலுக்குரிய செப்புச் சிலை இக் கோயிலில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. நான்கு கைகளில் ஆயுதம் ஏந்திக் காட்சியளிக்கும் இச்சிலை தாமரைப் பீடத்தில் வீற்றிருக்கும் நிலையில் வார்க்கப்பட்டுள்ளது.

நாகம் சுற்றிய உடுக்கை மேல் வலக்கையிலும், திரிசூலம் இடக்கையிலும் கத்தி, கீழ்தலக்கையிலும், கபாலம் இடக் கையிலுமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

சுடர் முடியைக் கொண்ட அம்மனின் தலை மீது ஐந்து தலை நாகம் ஒன்று படமெடுத்து ஆடும் நிலையில் காட்டப்பட்டுள்ளது.

காதில் ஓலைக்குழையும், கழுத்தில் அணிகளும், மார்பில் கச்சையும், கையில் காப்பும் இடையில் முழங்காலுக்குக் கீழ் வரை ஆடையும், காலில் மெல்லிய பாதசரமும் அணிந்து அருள் பாலிக்கும்

இப் பெண் தெய்வம் வளவனூரின் மக்கள் தெய்வமாகப் போற்றப்படுகிறது.

இப் படிமம் கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும்.

சிவன் கோயிலில் உள்ள பராசக்தியின் செப்புச் சிலையும், மாரியம்மன் கோவிலுக்குரிய படிமமும் கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதை இத் திருமேனிகளின் அமைப்பினைக் கொண்டும் ஆடை அணிகள் மற்றும் ஆயுதங்களின் தன்மையைக் கொண்டும் அறிய முடிகிறது.

இத்திருமேனிகள் அனைத்தும் செப்புக் கலவையால் கனமாக வார்க்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் இக் கோயிலில் நடைபெறும் விழாக்களிலும், பாத பூஜைகளிலும் இத் திருமேனிகள் சிறப்புப் பெறுகின்றன.

ஆடிப் பூரத்தன்றும், நவராத்திரி விழாவின் 9 இரவுகளிலும் அம்மனுக்குச் சிறப்பு அலங்காரம் செய்து எழுந்தருளச் செய்வர்.

## சூரியன் வழிபடும் கோயில்

1) சித்திரை வருடப் பிறப்பன்று இத்தலத்து இறைவன் இறைவிக்குச் சிறப்புப் பூசை நடைபெறுகிறது. அன்று காலை புதுப் பஞ்சாங்கம் சாஸ்திரியால் வாசிக்கப்படுகிறது.

இக் கோயிலில் சித்திரை வருடப்பிறப்பு முதல், 7 நாட்களுக்கு சூரிய வழிபாடு நடைபெறும். இந் நாட்களில் இத்தலத்திலுள்ள இறைவன், இறைவி, விநாயகர், முருகன் ஆகிய இறை உருவங்கள் மீது ஏக காலத்தில் சூரியஒளி விழுகிறது. வளவனூர் தலத்துக்குரிய சிறப்புகளில் இது குறிப்பிடத்தக்கது.

சித்திரை திருவோண நட்சத்திரத்தில் இங்கு விசேஷ பூசை நடைபெறுகிறது. சித்திரை சதயம் அன்று திருநாவுக்கரசருடைய தேவாரப் பதிகம் படிக்கப்படுகிறது.

சித்திரை கிருத்திகை அன்று மூலவர் சுப்பிர மணிய சுவாமிக்கு அபிஷேக ஆராதனையும் பிரகார உற்சவமும் நடைபெறுகிறது.

2) வைகாசிவிசாகத்தன்று முருகனுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

வைகாசி மூலதினத்தன்று காழியம் பதியில் தோன்றிய ஆளுடைய பிள்ளையான திருஞான சம்பந்தருக்குத் தேவாரப் பதிகம் பாடப்படுகிறது.

3) ஆனித் திங்களில் நடராஜருக்கு ஆனித் திருமஞ்சனம் நடைபெறுகிறது.

ஆனி மகத்தன்று வாதவூரில் பிறந்த மாணிக்க வாசகப் பெருமான் நினைவாக, விசேஷ ஆராதனை செய்து அன்று இரவு அச்சிலையை ஜகந்நாத ஈஸ் வரர் கருவறைக்கு எழுந்தருளச் செய்து திருவாசகம் படிக்கப்படுகிறது.

## ஆடிப் பூரவிழா

இக் கோயிலில் நடக்கும் விழாக்களில் ஆடிப்பூர விழாவே சிறப்பானதாகும். ஆடிப் பூரத்திற்கு நான்கு நாட்களுக்கு முன்பாக, பராசக்திஅம்மனைத் தனியாகப் பிரித்து வைத்து, முதல் இரண்டு நாட்களுக்கு அம்மனுக்கு விசேஷ பூசை நடைபெறும்.

மூன்றாம் நாள் மாலை புட்டு, சர்க்கரை, பழம், தாம்பூலம் முதலியவற்றை அம்பாளுக்கு வைத்துப் பூசை செய்து அவற்றை அக்ரஹாரத்திலுள்ள அனைத்துக் குடும்பத்தினருக்கும் விநியோகம் செய்வது வழக்கம்.

நான்காம் நாள் காலையில் அம்மனுக்கு வளையல் அணிவித்து, ஆலயத்திற்கு வரும் அனைத்துப் பெண்டிருக்கும் வளையல் விநியோகம் செய்வதும் வழக்கமாக இருந்து வருகிறது. அதன் பிறகு இத் தலத்து அனைத்துத் தெய்வ உருவங்களுக்கும் அபிடேக ஆராதனை செய்வர். அன்று பிற்பகல் பஞ்சபட்சபரமான்னத்துடன் (ஐந்துவகைக் கறி அமுது) வடை பாயசம் உட்பட அம்பாளுக்கு நைவேத்தியம் செய்யப்படுகிறது.

அன்று மாலை பராசக்தியை வள்ளி, தெய்வானை தோழியருடன் எழுந்தருளச் செய்து, விதி உற்சவம் நடைபெறுகிறது. இத்தலத்து இறைவி ஆடிப் பூர நாளில் வயதுக்கு வந்ததை நினைவூட்டும் வகையில் இவ் விழா எடுக்கப் படுகிறது.



மூலவர் ஜகந்நாத ஈஸ்வரர், வளவனூர்
செஞ்சி நாயக்கர் காலம்
கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டு



யாளி வரி, கபோதகச் சிற்பம்; சிவன் கோயில்
செஞ்சிநாயக்கர் காலம். கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டு.



புலியோடு போராடும் வீரனின் சிற்பம்
செஞ்சி நாயக்கர் கலை. கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டு



சுந்தரர் செப்புத் திருமேனி
பிற்கால செஞ்சி நாயக்கர் கலை
கி. பி. 18 ஆம் நூற்றாண்டு



அய்யனார் செப்புத்திருமேனி
செஞ்சி நாயக்கர் கலை
கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டு



அய்யனார் தேவி - பூரணி செப்புத் திருமேனி
செஞ்சி நாயக்கர் கலை
கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டு



அஸ்திர தேவர் செப்புத்திருமேனி
செஞ்சி நாயக்கர் கலை
கி.பி. 18 ஆம் நூற்றாண்டு



சிவன் சோமாஸ்கந்தர் குழு செப்புத்திருமேனி
பிற்கால செஞ்சி நாயக்கர் கலை
கி. பி. 18 ஆம் நூற்றாண்டு



சந்திரசேகரர் செப்புத் திருமேனி
பிற்கால செஞ்சி நாயக்கர் கலை
கி. பி. 18 ஆம் நூற்றாண்டு



சுப்பிரமணியர் செப்புத் திருமேனி
கி. பி. 18 ஆம் நூற்றாண்டு



மாரியம்மன் செப்புத் திருமேனி
கி. பி. 19 ஆம் நூற்றாண்டு

ஆடிக்கிருத்திகை அன்று சுப்பிரமணியர் வள்ளி தேவசேனை ஆகிய தெய்வ உருவங்களுக்கு விசேஷ ஆராதனையும், அன்று மாலை மயில் வாகனத்தில் சுப்பிரமணியரை வள்ளி, தேவசேனை சமேதராக எழுந்தருளச் செய்துவீதிவுலாவும் நடைபெறுகிறது.

ஆடித் திங்களில் வெள்ளிக்கிழமை தோறும் பராசக்தி அம்பாளுக்கு முன்மண்டபத்தில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறுகிறது.

ஆடி சுவாதித் திதியில் பிறந்த சுந்தரமூர்த்தி நாயனார் நினைவாகத் தேவாரப் பதிகங்கள் பாடி ஆராதனை செய்யப்படுகிறது.

ஆவணி மூலத்தன்று வந்திக் கிழவிக்காகப் பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் நினைவாகப் பிட்டுக்கு மண் சுமந்த நிலையில், சிவனை அலங்காரம் செய்து எடுத்துக் கோயிலைச் சுற்றி உலா வருவர்.

ஆவணிசதுர்த்தி அன்று காலையில் கணபதிக்கு ஹோமம் செய்வித்து விசேஷ ஆராதனை நடைபெறுகிறது, அன்று மாலை விநாயகரை மூஷிக வாகனத்தின் வீதியுலாவாக எழுந்தருளச் செய்வர்.

ஆவணித் திங்களில் நடராஜப் பெருமானுக்கு சதுர்த்தி திதியில் அபிடேக ஆராதனை நடைபெறுகிறது.

புரட்டாசித் திங்களில் நவராத்திரி ஒன்பது நாட்களும் அம்மனுக்கு 9 வகை அலங்காரம் செய்து கொலுவில் வைப்பர்.

பத்தாம் நாள் இரவு அம்மன் முருகனிடமிருந்து வேலைப் பெற்று அம்பு போடும் விழா கோயில் வாசல் முன் நடைபெறும். புரட்டாசித் திங்களில் நடராஜருக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

ஐப்பசிப் பௌர்ணமி அன்று அன்னாபிஷேகம் நடைபெறுகிறது. தீபாவளியன்று இறைவன் இறைவிக்கு எண்ணெய் சாத்தி அபிஷேகம் செய்து புது வஸ்திரங்கள் அணிவிப்பது வழக்கம்.

ஐப்பசி பிரதமை திதி முதல் சஷ்டி திதி வரை முதல் ஆறு நாள்களுக்கு மூலவர் முருகனுக்கு அபிஷேக ஆராதனையும், 7 ஆவது நாள் உற்சவருக்கு திருக்கல்யாணமும் வீதி உற்சவமும் நடைபெறுகிறது,

கார்த்திகை மாதத்தில் முதல் மூன்று சோம வாரத்தில் (திங்களில்) இறைவன் இறைவிக்கு அபிஷேக ஆராதனையும், மாலை வேளையில் உற்சவரை எழுந்தருளச் செய்வது வழக்கம்.

நான்காவது சோமவாரத்தன்று ஜகந்நாதேஸ்வரர்க்கு வலம்புரிச் சங்கு உட்பட 108 சங்காபிஷேகம் நடைபெறுகிறது. அன்று மாலை சந்திரசேகரரை அம்பாளுடன் எழுந்தருளச் செய்வர்.

கார்த்திகை தீபத்தன்று மூலவர் பஞ்ச மூர்த்திகளுக்கும் அபிஷேக ஆராதனை செய்வர். அன்று இரவு இறைவன் இறைவி மற்றும் சுப்பிரமணியரை எழுந்தருளச் செய்து அவர்கள் முன்பு சொக்கப் பனை எரிப்பர்.

மார்கழித் திங்கள் முப்பது நாளும் அதிகாலை அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. மார்கழி திருவாதிரை அன்று நடராஜப் பெருமானுக்கு அதிகாலை அபிஷேகமும், தொடர்ந்து ஆருத்ரா தரிசனமும் நடந்த பிறகு, பஞ்சமூர்த்திகளையும் வீதியுலா எழுந்தருளச் செய்து ஊடல் உற்சவம் நடைபெறும்.

தைத்திங்கள் முதல் நாள் சங்கராந்தி விழாவும் இரண்டாம் நாள் நந்திகேஸ்வரர்க்குச் சிறப்பு வழிபாடும் நடைபெறுகின்றது. அன்று சிவபெருமானை ரிஷபாருடராக நந்திகேஸ்வரர் முன் எழுந்தருளச் செய்வர். அதன் பிறகு வீதி உற்சவம் நடைபெறும்.

தைக் கிருத்திகை நாள் அன்று சிப்பிரமணிய சுவாமிக்கு, காலையில் அபிஷேக ஆராதனை செய்வர். மாலையில் மயில் வாகனத்தில் அவரது வீதியுலா நடைபெறும்.

அவ்வாறு தைப் பூசத்தன்றும் காலையில் மூலவருக்கு அபிஷேக ஆராதனை செய்வித்துமாலையில் கோயிலுக்குள் உற்சவரை எழுந்தருளச் செய்வர்.

தைத்திங்களில் வெள்ளி தோறும் அம்பாளுக்கு காலையில் அபிஷேக ஆராதனையும், மாலையில் ஊஞ்சல் உற்சவமும் நடைபெறும்.

தைத் திங்களில் சண்டிகேஸ்வரருக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

மாசி சிவராத்திரி அன்று இறைவனுக்கு நான்கு காலப் பூசையும் வீதி உற்சவமும் நடைபெறுகிறது.

# கல்வெட்டுச் செய்திகள்

## முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு
## (கி.பி. 1012 - 1044)

சோழ மாமன்னன் முதலாம் இராஜராஜனின் மைந்தன் முதலாம் இராஜேந்திரசோழன் வடநாடு வரை படை எடுத்து; கங்கைப் பகுதி, வங்காளம் கடாரம், ஸ்ரீவிஜயம் ஆகிய நாடுகளை வென்று பேரரசனாகத் திகழ்ந்தவன்.

அவனது மெய்க்கீர்த்தி அவன் வென்ற நாடு களை வரிசைபடுத்திக் கூறுகிறது. அந்த மெய்க் கீர்த்தியின் ஒரு பகுதிதான் வளவனூரில் கிடைத் துள்ளது.

இந்தக் கல்வெட்டில் முதலாம் இராஜேந்திர சோழன், இடைத்துறைநாடு, வனவாசி, கொள்ளிப் பாக்கை, மண்ணைக் கடக்கம், ஈழமண்டலம், கேரள

நாடு, ஈழமண்டலத்தில் பாண்டியன் பாதுகாப்பாக வைத்திருந்த சுந்தர முடி, இந்திரன் ஆரம் ஆகிய வற்றை மீட்டது பற்றிய செய்திகளைக் கூறுகிறது.

**கல்வெட்டு**

1 ...(பெருந்) தேவியராகி யின்புற நெடுதுயிலூழி யில் (இடைத்துறை நாடுந்)...

2 ...வெலி படர் வன வாசியும் சுள்ள சூழ் மதிட் கொள்ளிப்பாக்...

3 ...நண்ணற் கரு முரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழ...

4 ...த முடியுமாங்கவர் தெவியரொங் கெழில்முடியு முன்...

5 ...பக்கற் தென்னவன் வைத்த சுதார முடியு மிந்தினாரமு...

6 ...(தென்) திசை ஈழ மண்டல முழுவது மெறி படைக் கேரளன்...............

## முதலாம் குலோத்துங்க சோழன்

இவன் கீழைச் சாளுக்கிய மன்னன் இராஜ ராஜ நரேந்திரனின் புதல்வன், இவனது தாய் அம்மங்கை தேவி. குலோத்துங்க சோழன் என்பது இவனது அபிஷேகப் பெயர் ஆகும். இவனுக்கு,

உபயதரன்
அபயன்
இராச நாராயணன்

என்ற சிறப்புப் பெயர்கள் வழங்கி வந்துள்ளன.

இவனுக்கு இளமையில் இராஜேந்திரன் என்னும் பெயர் இருந்த செய்தியைச் செல்லூர்ச் செப்பேடுகளால் அறிய முடிகின்றது.

இவன் கி.பி. 1070 ஜூன் திங்கள் 9 ஆம் நாளில் முடிசூட்டிக் கொண்டு குலோத்துங் கன் என்னும் பெயர் சூட்டிக் கொண்டான்.

இம் மன்னன் கி. பி. 1076 ஆம் ஆண்டு மேலைச் சாளுக்கியரோடு போர் புரிந்தான்.

பாண்டிய மன்னர்கள் திறை செலுத்த மறுத்த போது இவன் கி.பி. 1081 இல் பாண்டிய நாட்டின் மீது படை எடுத்துச் சென்றான், தவிர இவன், சோழனுடனும் போர் நடத்தியுள்ளான்.

இவன் இராஜ கேசரி ஆவான். வளவனூரில் இவனது கல்வெட்டு 'புகழ்மாது விளங்க செயமாது விரும்ப' என்னும் மெய்க் கீர்த்தியுடன் தொடங்குகிறது. இது குலோத்துங்க சோழனின் முழுமையற்ற துண்டுக் கல்வெட்டானதால் ஆட்சியாண்டு அறிய முடியாதவாறு சிதைந்துள்ளது.

கல்வெட்டு

1. (திரு) மந்தி வளர இருநில மடன்தையும் போர்ச் செய்......
2. (புகழ் மாது) விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவ
3. ...கெட மீனவர் குலைதர ஏனை மன்:நவரிரி (யலுற்றுழி ...)
4. புவநி முழுதுடையாள்ளொடும் வீற்(றிருந் தருளிய) ...
5. ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யா......
6. வள நாட்டு பிரமதே யம் திரிபுவன...
7. மா தேவிக்கு பரகெசரி க்ாரம்பி செட்
8. ...க்கு [பருமன்] பக்கல் வேண்டும் விந்தைக்...

இக் கல்வெட்டு முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தைச் சேர்ந்தது. இம் மன்னன் கி.பி. 1070 முதல் 1120 வரை ஆட்சி புரிந்தான். இக் கல்வெட்டு அம்மன்னனது மெய்க் கீர்த்தியுடன் தொடங்குகிறது. இவ்வூர் அந்தணர்களுக்குத் தான மாக வழங்கப்பட்ட பிரமதேய ஊர் என்ற செய்தி இக் கல்வெட்டு மூலம் தெரியு வருகிறது. இக் கல் வெட்டு 900 ஆண்டுக்கு முற்பட்டது. பிற்காலச் சோழராட்சிக்குள் இப் பகுதி அமைந்திருந்ததை இக் கல்வெட்டால் அறிகிறோம்.

★

அம்மன் கோயில் முக மண்டபத் தூணில் கீழ்க் கண்ட கல்வெட்டு உள்ளது.

இக்கல் வெட்டு,

> வீர வல்லி
> செகனாத
> பட்டர் புத்
> திரன் சதா சேர்வை

என்று உள்ளது. வீரவல்லி செகனாத பட்டர் மகன் இத்தூணைக் கொடையாக அளித்ததை இக் கல் வெட்டால் அறிகிறோம் இத்தூணில் கொடை யளித்தவரின் உருவமுகம் அமர்ந்து இரு கரம் கூப்பி வணங்கிய நிலையில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வளவனூர் சிவன் கோயில் மகா மண்டபச் சுவரில் உள்ள கல்வெட்டு வருமாறு:

'சீராம பிள்ளை நயினார்
ஸதா ஸேவை'

என்று உள்ளது. இராமபிள்ளை நயினார் என்பவர் இக்கோயிலுக்குச் செய்த பணியை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு கி.பி. 16 அல்லது 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் காணப்படு கிறது. இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள மகா மண்டபத்தின் கட்டட அமைப்பும் அதே காலத் தைச் சேர்ந்ததாகக் காணப்படுகிறது. எனவே ராமபிள்ளை நயினார் இக் கோயிலுக்குச் செய்த பணி கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள மகா மண்டபத்தைக் கட்டித் தந்த பணியாகவே இருத்தல் வேண்டும் எனலாம்.

இக்கோயில் சுவரிலுள்ள மற்றொரு கல்வெட்டு ரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆசந்த்ரார்க்கம் என்ற சொல் மட்டுமே உள் ளது. ஆசந்த்ரார்க்கம் என்றால், சந்திரனும் சூரிய னும் உள்ளவரை அவர்கள் செய்துள்ள பணி நிலைத்து நிற்க வேண்டும் என்பது பொருளாகும்.

இதன்காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருத்தல் வேண்டும். எனவே இக் கோயிலுக்கு இந் நூற்றாண்டில் திருப்பணி நடந்தி ருத்தல் வேண்டும் என்பதை அறியமுடிகிறது.

# திருக்கோயில் நிருவாகம்

1880 ஆம் ஆண்டில் இருந்து இக் கோயில் விரிவாக்கப் பணிக்கு உதவியவர்கள் திருவாளர்கள் சி கே. வெங்கடரமண அய்யர், சி.கே. கோவிந்த அய்யர் ஆகிய இருவர் ஆவர். இவர்கள் கோயில் பூசைகளையும் கட்டளை முறைகளையும் வளவனூர் அக்ரகாரத்தில் உள்ள முக்கியஸ்தர்களுக்குப் பகிர்ந்தளித்து முறைப்படுத்தியுள்ளனர். இக் கட்டளைகள் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து திரு சி. கே. கோ. வைத்தியநாத அய்யரும் திரு வி. டி. இராமசாமி அய்யரும் சிவன் கோயில் நிருவாகத்தைக் கவனித்து வந்தார்கள்.

இதே போன்று பெருமாள் கோயில் நிருவாகத்தைத் திரு. சி. கே. நாகையர் வழித்தோன்றல்கள் நிருவகித்து வந்துள்ளனர். தற்போது, சிவன் கோயில் நிருவாக அறங்காவலராகத் திரு ச. அரங்கநாத அய்யர் அவர்களும் பெருமாள் கோயில் பரம்பரை அறங்காவலர்களாகத்

திரு. ந. கிருஷ்ண பட்டாச்சாரியார் அவர்களும் திருமதி. க. தங்கம்மாள் அவர்களும் இருந்து வருகிறார்கள்.

இவ்வூர்ப் பெருமாள் கோயிலைத் தொடக்கக் காலத்திலிருந்து திரு சி. கே. நாகையர் வழித் தோன்றல்கள் ஆதரித்து வந்துள்ளனர்.

பெருமாள் கோயிலில் பூசை செய்யும் பட்டாச்சாரியார்களே அறங் காவலர்களாக இருந்து வருகின்றனர்.

1974 ஆம் ஆண்டு சிவன் கோயிலுக்குக் குடமுழுக்கு நடந்துள்ளது.

தொடர்ந்து 1985 ஆம் ஆண்டில் திருப்பணிகள் மேற்கொள்ளத் திரு ஜி. வி. இராமசாமி அய்யர் தலைமையில் திருப்பணிக் குழு ஒன்று அமைக்கப் பட்டுத் திருப்பணி நடத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது திரு. ரங்கநாத அய்யர் மேற்பார்வையில் திருப் பணி நடைபெற்று வருகிறது.



# லட்சுமிநாராயணப் பெருமாள் கோயில்

## கோயில் அமைப்பு

இக் கோயில் வளவனூர் அக்ரஹாரத்தின் தென் மேற்கே அமைந்துள்ளது.

தொடக்க காலத்தில் வேறொரு பகுதியில் இருந்த சோழர் காலத்துக் கோயில், எதிரிகளின் இடிபாடுகளுக்குப் பிறகு, செஞ்சி நாயக்கர்களின் கீழ் இருந்து வந்த பாளைக்காரர்களால் மீண்டும் இப் பகுதியில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இப் பணி கி. பி. 16 - 17 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்துள்ளதை இக் கோயில் கட்டட அமைப்பினைக் கொண்டு அறிகிறோம்.

கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் இப் பகுதியை ஆட்சி செய்த சம்புவராயர் காலத்துக் கோயில் சிற்பங்கள் மற்றும் செப்புத் திருமேனிகள் சிலவும் இக் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இக் கோயில் உண்ணாழி, அர்த்த மண்டபம், மகாமண்டபம், முக மண்டபம், கருடாழ்வார் சன்னதி, தாயார் சன்னதி, விகனஸர் சன்னதி,

ஆஞ்சநேயர் சன்னதி, கொடி மரம், பலி பீடம், வாகனக் கொட்டகை, திருச்சுற்று மதில் ஆகிய பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது.

இக் கோயில் இறைவன் திருப்பெயர் இலட்சுமி நாராயணப் பெருமாள். இறைவி வேதவல்லித் தாயார் இக்கோயில் வைகானஸ ஆகமம் என்னும் கோயில் கட்ட முறைப்படி இரு வேளை பூஜை நடைபெறுகிறது.

**உண்ணாழி**

இறைவன் உறையும் உண்ணாழி கீழ்த்திசையை நோக்கி உள்ளது. உண்ணாழி சதுர வடிவில் அமைந்துள்ளது. இதன் பக்க அளவு 2. 50 மீட்டர் ஆகும். உண்ணாழி நடுவே லட்சுமியை இடது தொடையில் கொண்டு அணைத்தவாறு மேற் கைகளில் ஆழியும் சங்கமும் ஏந்திக் கீழ் வலக் கையால் அருள் பாலிக்கும் நிலையில் மூலவரின் சிற்ப வடிவம் காட்சி அளிக்கிறது. இம் மூலவர் இலட்சுமி நாராயணர் என்ற பெயரில் வழிபாட்டில் உள்ளார்.

கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கலை வளத்தோடு மூலவரின் சிற்ப வடிவம் அமைந்துள்ளது.

உண்ணாழி வாயில் எளிமையான அமைப்புடன் விளங்குகிறது. இதன் சுவர் 95 செ. மீ. கனத்துடன் உறுதியாக அமைந்துள்ளது.

## அர்த்த மண்டபம்

உண்ணாழி முன் உள்ள அர்த்த மண்டபம் செவ்வக வடிவில் நீண்டுள்ளது. இப் பகுதி தூண்கள் ஏதுமின்றி எளிய அமைப்புடையது. அர்த்த மண்டபத்தில் பக்கச் சுவரை ஒட்டி, மேல் பகுதியில் உத்தரமும் அதன் கீழ் இருதலைப் போதிகையும் அலங்கரிக்கின்றன.

அர்த்த மண்டப வாயில் பக்கங்களில் எளிய இரு அரைத் தூண்கள் அலங்கரிக்கின்றன. வாயிற் படிகளில் முன்புறம் யானையும் யாளியும் மாறி மாறி அமைந்த அழகிய சிற்ப வரிசை காணப்படுகிறது. இவை சோழர் காலத்தில் இருந்த பழைய கோயிலுக்கு உரியன. அர்த்த மண்டபச் சுவரில் சோழர் கால உதிரிக் கல்வெட்டுகள் இருப்பதுவும் காணத் தக்கது. தற்போது அர்த்த மண்டபத்தில் உற்சவ விக்கிரகங்கள் வழிபாட்டில் உள்ளன.

## மகா மண்டபம்

அர்த்த மண்டபத்தின் முன்பு மகா மண்டபம் என்ற பகுதி சதுரவடிவில் விரிந்து காட்சியளிக்கிறது. இம் மண்டபத்தை இரு வரிசைகளின் நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத் தூண்கள் ஒவ்வொன்றும் மேலும் கீழும் நடுவிலும் சதுரமாக அமைந்து இடைப்பகுதி எண்பட்டை வடிவில் செதுக்கப்பட்டுள்ளது.

இத் தூண்கள் தலைப்பகுதியை இரு தலைப் போதிகைகள் அலங்கரிக்கின்றன. இவை சோழர் காலத்துத் தூண்களை ஒத்து விளங்குகின்றன. இத் தூண்கள் ஒவ்வொன்றும் 2.52 மீட்டர் உயர முடையவை.

இம் மண்டபத்தை அலங்கரிக்கும் தூண்களில் இம்மண்டபத்தைத் தோற்றுவித்த பாளையத் தலைவனையும், அவனது மனைவியையும் வணங்கி நிற்கும் கோலத்தில் காணலாம்.

இம் மண்டபத்தின் வட மேற்கு மூலையில் திருமாலின் நின்ற கோலச் சிற்பமும், வடக்கே லிங்கத்தைச் சுற்றிய நாகர் சிற்பமும் வழி பாட்டில் உள்ளன.

**முக மண்டபம்**

மகா மண்டபத்தின் முன்புறம் முக மண்டபம் அமைந்துள்ளது. இதன் முன் வரிசையில் நான்கு தூண்கள் அலங்கரிக்கின்றன. தென் கிழக்கில் மூலையில் உள்ள தூணில் இம் மண்டபத்தை எழுப்பிய அரசனின் உருவம் வணங்கி நின்ற கோலத்தில் உள்ளது. இது கி. பி. 16 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இம் மண்டபத்தின் வடகிழக்குத் தூணில் இரு கைகளைக் கீழே ஊன்றியவாறு இரு கால்களை மேலே உயர்த்திக் கழைக் கூத்தாடும் சிற்பமும் காணத்தக்கது.



லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் விமானம்
செஞ்சி நாயக்கர் காலம் கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டு



திருமகளும் நிலமகளும் சூழ திருமால் - சம்புவராயர் கலை - கி. பி 14 ஆம் நூற்றாண்டு



விகனச ஆசாரியார், செப்புத் திருமேனி
கி. பி. 19 ஆம் நூற்றாண்டு

ஸ்ரீதேவி, விஷ்ணு, பூதேவி செப்புத் திருமேனிகள், அண்மைக் காலம்.



முக மண்டபத்தின் விதானத்தில் இரு பெரும் பல்லிகள் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு இரையைக் கவ்வும் காட்சி வெகு இயற்கையாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

## தாயார் சன்னதி

இக் கோயில் திருச்சுற்றின் தென்மேற்குப் பகுதியில் தாயார் சன்னதி அமைந்துள்ளது. இது கீழ்த்திசை நோக்கியுள்ளது. சன்னதி நடுவே தனிக் கோயில் தாயார் பத்மாசனத்தில் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறார்.

மேற்கைகள் இரண்டும் மலர்ந்த தாமரை மலரைக் கொண்டு உள்ளன. கீழ்க் கைகள் அபய வரதம் அளித்து அருள் பாலிக்கின்றன. வேத வல்லித் தாயார் என்ற பெயரில் இவ் வடிவம் வழிபாட்டில் உள்ளது. தாயார் சன்னதியின் அர்த்தமண்டபத்தின் முன்பு வசந்த மண்டப மேடை காணப்படுகிறது.

தாயார் சன்னதி முன்பு இருவரிசைகளில் பதினாறு தூண்கள் அலங்கரிக்க முக மண்டபம் காட்சியளிக்கிறது. இத் தூண்கள் ஒவ்வொன்றும் மூன்று மீட்டர் உயரம் உடையது. இதன் போதிகை சோழர் காலத்துத் தூண்களை ஒத்த அமைப்பு உடையவை. தாயார் சன்னதியின் அருகில் துர்க்கை சன்னதி உள்ளது.

இது பெருமாள் கோவில் கருவறையின் தென் புறக் கோட்டத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள துர்கை திருவடியின் கீழ் எருமைத்தலை இல்லாமல் நின்ற கோலத்தில் வைணவ துர்கையாகக் காட்சியளிக்கிறது. இத் துர்கைக்கு நித்தம் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

## வைணவ துர்க்கை

இச் சிற்பம் மேல் வலக் கையில் சக்கரமும், இடக் கையில் சங்கும் ஏந்தியுள்ளது. இதன் கீழ் வலக்கை அபய முத்திரையில் அமைந்துள்ளது. இடக்கை தொடை மீது ஊருமுத்திரையில் காணப்படுகிறது.

கரண்ட மகுடம் துர்க்கையின் தலையில் அலங்கரிக்கிறது. இதன் காதுகளில் பத்ரக் குண்டலங்கள் அணி செய்கின்றன. மார்பில் மார்க்கச்சை உள்ளது. மேற்கையில் பூரிமம் பதித்த கேயூரமும், முழங்கையில் மணிகள் கோத்த கடகமும், முன் கையில் காப்பும் அலங்கரிக்கின்றன.

இதன் இடது தோளில் நூல் ஓடுகிறது. இடையில் மடிப்புகளுடைய இடைக் கச்சையும், காலில் பாத சரமும், இச் சிற்பத்தை அலங்கரிக்கின்றன. இச் சிற்பத்தின் உருவ அமைதி ஆடை அணிகளின் தன்மை யாவும் கொண்டு இதனைச் சம்புவராயர் காலக் கலையாகக் கருதலாம்.

இதன் காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு. இது கோலியனூர்ச் சிற்பங்களுடன் ஒப்பிடத்தக்கது, இதன் உருவம் 62 செ. மீ. உயரமும் 16 செ மீட்டர் அகலமும் உடையது.

இவ்வூர் நந்தவனத்தில் இருந்த இச் சிலையை ஊரார் எடுத்து வந்து வழிபாட்டில் வைத்துள்ள தாகச் செவி வழிச் செய்திகளால் அறிகிறோம்.

இவ்வாறு இக் கோயில் மகா மண்டபத்தில் உள்ள திருமாலின் கற்சிலையும் காலத்தால் பழமைமிக்கது

## திருமால்

இச் சிற்பம் நான்குகரங்களுடன் நேராக நின்ற கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மேல் கைகள் இரண்டும் ஆழியும் சங்கமும் ஏந்தியுள்ளன. கீழ் வலக்கை அபய முத்திரை காட்டி அருள் பாலிக்கிறது. இடக்கை இடைமீதே அமைந் துள்ளது.

திருமாலின் தலையில் கிரீட மகுடம் அலங்கரிக் கிறது. மற்றும் மகர குண்டலங்கள், மணி வடம், முத்துவடம், சரப்பளி, சவடி, கேயூரம், பூணூல், உதரபந்தம், கடகம், கைவளை, காப்பு, பீதாம் பரம், பாதசரம் ஆகிய அணிகளும் ஆடையும், திருமாலின் முடி முதல் அடிவரை அலங்கரிக் கின்றன.

இச் சிற்பத்தின் பழமை, பொலிவு, ஆடை அணிகள், அங்கங்களின் அமைப்பு, தலைக் கோலம் யாவும் கொண்டு இதனைச் சம்புவராயர் காலக் கலையாகக் கருதலாம்.

இதன் காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு. கோலியனூர் பகுதியை ஆண்ட ராஜ நாராயண சம்புவராயர் காலத்தியதாக இதனைக் கருதலாம்.

இதுவும் கோயில் திருப்பணியின் போது, வேறொரு விண்ணகரத்திலிருந்து கொண்டு வரப் பட்டதாக செவி வழிச் செய்தியால் அறிகிறோம். இது 70. செ. மீ. உயரமும், 18 செ மீ. அகலமும் உடையது. இச்சிற்பம் மகா மண்டபத்தின் வட மேற்கு மூலையில் அமைந்துள்ளது. இக்கோயிலில் உள்ள அழகிய சிற்பங்களில் இதுவும் ஒன்று.

### விகனசர் சன்னதி

இக் கோயில் திருச்சுற்றின் வடமேற்கு மூலை யில் விகனசர் சன்னதி அமைந்துள்ளது. இச் சன்னதி கீழ்த்திசை நோக்கியது. சன்னதி நடுவே விகனசரின் சிற்பம் வனப்போடு காட்சியளிக்கிறது.

### விகனசர்

இச் சிற்பம் உயர்ந்த பீடத்தின் மீது இரு கால்களையும் மடித்து, அமர்ந்த கோலத்தில், நான்கு கைகளுடன் காணப்படுகிறது விகனசரின் தலையில் கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. கழுத்தில் பதக்கம் கோத்த தொங்கு வடமும் இடது தோளில்

பூணூலும், இடையில் கச்சையும் அலங்கரிக்கின்றன. நெற்றியில் திருமண் உள்ளது.

இவர் அமர்ந்துள்ளது பீடம் உயர்ந்து எழிலூட்டுகிறது. பீடத்தின் இடப்புறம் கெண்டியும், வலப்புறம் செங்கோலும் காணப்படுகின்றன. இச் சிற்பம் 82 செ. மீ. உயரமும், 30 செ மீ. அகலமும் உடையது கி. பி. 16 – 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இது செஞ்சி நாயக்கர் காலத்தியது.

## ஆஞ்சநேயர் சன்னதி

பொதுவாக ஆஞ்சநேயர் சன்னதியைப் பெருமாள் கோயிலின் உட்புறத்தில் அமைப்பது வழக்கம். வளவனூரில் இச் சன்னதி பெருமாள் கோயில் வாயிலின் முன்புறம் அமைந்துள்ளதும், மூலவர் சன்னதியைப் பார்த்த வண்ணம் அமைந்துள்ளதும், காணத்தக்கது. இதனை இங்குச் சிறப்பு அம்சமாகக் கருதவேண்டும். ஆஞ்சநேயரின் முகம் மூலவரைப் பார்த்த வண்ணம் உள்ளதால் சக்தி மிக்கதாகக் கருதப்படுகிறது.

விகனசரைத் திருச்சுற்றின் வடமேற்கு மூலையிலும், ஆஞ்சநேயரைக் கோபுர வாயிலின்முன்புறமும் அமைத்துள்ளதை இக்கோயிலின் தனிச்சிறப்பாகக் கருதவேண்டும்.

## விமானம்

பெருமாள் கோயில் விமானம் எளிய அமைப்புடையது. இதன் அதிட்டானம் வேலைப்பாடின்றி

மிக எளிய உறுப்புகளுடன் திகழ்கிறது. கருவறைப் புறச்சுவரைச் சுற்றிலும் அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய தேவ கோட்ட மாடங்கள் எளிய அமைப்புடையன. அதிட்டானம் முதல் கபோதகம் வரை கருங்கல்லாலும், அதன் மேலுள்ள, வேஸர சிகரம் செங்கல்லும் சுதையும் கொண்டு எழுப்பப்பட்டுள்ளன.

இதன் கிரீவம் என்னும் கழுத்துப்பகுதி வட்ட வடிவுடையது. கிரீவ கோட்டத்தின் தென் திசையில் தட்சிணாமூர்த்தியும், மேல் திசையில் லட்சுமி நரசிம்மரும், வடதிசையில் நான்முகனும் சுதை உருவங்களாகக் காட்சி அளிக்கின்றனர். சிகரத்தின் மேல் உலோகத்தாலான ஸ்தூபி அலங்கரிக்கிறது. இக் கோயிலும் விமானமும் கி. பி. 16-17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை; செஞ்சிநாயக்கர் காலத்தியவை.

### வாகன மண்டபம்

இக் கோயிற் திருச்சுற்றின் தென் திசையில் வாகன மண்டபம் அமைந்துள்ளது. இங்கு ஏழு தலைகளைக் கொண்ட சேஷ வாகனமும், கருட வாகனமும், அன்னவாகனமும், ஆஞ்சநேயர் வாகனமும், குதிரை வாகனமும், சிங்க வாகனமும், யானை வாகனமும் உள்ளன. இவை 75 ஆண்டு கட்கு முற்பட்டவை. இவை இக் கோயிலில் நடந்த, நடந்து வருகிற உற்சவங்களை நினைவூட்டு கின்றன. இவ் வாகனங்கள் மரச் சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன.

# செப்புத் திருமேனிகள்

இக்கோயிலில் மொத்தம் 15 செப்புத் திருமேனிகள் வழிபாட்டில் உள்ளன. இவை சோழர், சம்புவராயர். செஞ்சி நாயக்கர் காலத்தவையாகவும் மற்றும் அண்மைக் காலத்தைச் சேர்ந்தவையாகவும் கருதப்படுகின்றன.

இக் கோயிலில் உள்ள செல்வர் என்னும் திருமாலின் சிறிய படிமம் சோழர் காலத்தியது. பழைய உற்சவரான திருமாலும் திருமகளும், நிலமகளும் மற்றும் நவனீத கிருஷ்ணனும் சம்புவராயர் காலத்தவை. தனிக் கோயில் தாயாரான வேதவல்லித் தாயார் படிமம் செஞ்சி நாயக்கர் காலத்தது. ஏனைய சிலைகளில் விகனச ஆச்சாரியார் சிலை கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இக்கோயிலில் உள்ள சிறிய இராமர் குழு வளவனூர் பொன்னம்மாள் குடும்பத்தினரால் இக் கோயிலுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவை கி. பி. 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. புதிய உற்சவரான விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் சூடிக் கொடுத்த நாச்சியாரான ஆண்டாள் சிலையும் சி. கே. என். வழியினரால் 1905 இல் செய்தளிக்கப் பட்டுள்ளன.

இவை யாவும் செப்புக் கலவை கொண்டு தேன் மெழுகு முறையில் முழுதும் கனமாக வார்க்கப் பட்டுள்ளன.

காலந்தோறும் வளர்ந்த செப்புப் படிமங்களின் கலைப்பாணியை அறிந்து கொள்ளவும் அளவிடவும் இச்சிலைகள் நமக்குப் பெரிதும் உதவுகின்றன.

இனி, பெருமாள் கோயிலில் உள்ள செப்புத்திரு மேனிகளின் விளக்கத்தினையும் படிமச் சிறப்பினை யும் காணலாம்.

**செல்வர்**

செல்வர் என்னும் திருமாலின் சிறிய படிமம் இது. இவ்வாலயத்தில் உள்ள பழமையான படிமங் களில் இதுவும் ஒன்று.

அழகிய அணிகளையும் ஆடைகளையும் அணிந்து எழிலுருவாய் நெடியோனாக நான்கு கை களுடன் வார்க்கப்பட்டுள்ளது.

மேல் வலக்கை, ஆழியைப் பக்க வாட்டில் சாய்த்த நிலையில் பிரயோக சக்கரமாகக் கொண் டுள்ளது. இடக்கை, சக்கரத்தைக் கத்தரி முத்திரை யில் பற்றியுள்ளது.

கீழ் வலக்கை, அபயமுத்திரையில் அருள்பாலிக் கிறது. இக்கையின் இரு விரல்களுக்கிடையே சிறிய தாமரை மொட்டு, காட்டப்பட்டுள்ளது.

இடதுகை, கதாயுதத்தின் மீது பொருந்தும் பாவனையில் அமைந்துள்ளது. கதாயுதம் முற்றிலும் உடைந்த நிலையில் மேல் காம்பை மட்டும் கொண்டு காணப்படுகிறது.

திருமாலின் தலையில், பூரிமங்களுடன் கூடிய கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. பின் தலையில், சிரச்சக்கரம் அமைந்துள்ளது.

காதுகளில் மகர குண்டலங்கள் அணிசெய்கின்றன கழுத்தில் மணிவடம், சரப்பளி, சவடி ஆகிய அணிகள் அழகு செய்கின்றன

இடது மார்பில் பூணூல் ஓடுகிறது. மேல் வயிற்றில் உதரக்கச்சை கட்டப்பட்டுள்ளது. இடையில் சிம்ம முகப்புடைய கச்சையும் இடையின் பக்கங்களில் நீண்டு தொங்கும் ஆடைக் கட்டும் அலங்கரிக்கின்றன.

மேற் கைகளில் புஷ்ப பூரிமம் பதித்த கேயூரமும் முழங்கையில் கடகமும், முன் கைகளில் மூன்று வளைகளும் காலில் பாதசரமும் அலங்கரிக்கின்றன.

வட்ட முகம், அகன்ற நெற்றி, மலர்ந்த கண்களும், எடுப்பான மூக்கும், குவிந்த திருவாயும், அளவான அங்கங்களும் கொண்டு முறையாக அமைந்துள்ளது.

இப்படிமம். கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பிற்காலச் சோழர் காலத்தியது. இதன் உயரம் 33 5 செ.மீ, அகலம் 8 செ.மீ. ஆகும்.

## திருமால் (பழைய உற்சவர்)

இவ்வாலயத்தில் திருமகளும் நிலமகளும் சூழத் திருமாலின் படிமக் குழுக்கள் இரண்டு உள. ஒன்று பழைய உற்சவர் என்றும் மற்றொன்று புதிய உற்சவர் என்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

பழைய உற்சவரின் படிமக்குழுவைச் சார்ந்த திருமாலின் திருமேனி எழில் மிக்கது.

இப்படிமம் தாமரை இருக்கையில் நான்கு கைகளுடன் நின்றகோலத்தில்வார்க்கப்பட்டுள்ளது. மேற் கைகளில் ஆழியும் சங்கமும் உள்ளன. கீழ் வலக்கை, அபயமுத்திரை காட்டி அருள்பாலிக் கிறது. இடது கை, கதாயுதத்தின் மீது அமையும் பாவனையில் உள்ளது. ஆனால் இங்கு கதாயுதம் காட்டப்படவில்லை.

தலையில் வேலைப்பாடு மிக்க உயர்ந்த கிரீட மகுடம் அலங்கரிக்கிறது. பின் தலையில் வட்டமான சிரச்சக்ரம் அழகு செய்கிறது.

காதுகளில் மகர குண்டலங்களும், தோள்களில் வாகு மாலையும், கழுத்தில், சரப்பளி, மணிவடம், சவடி ஆகிய அணிகளும் அலங்கரிக்கின்றன.

இடது தோளில் பூணூலும், மேல் வயிற்றில் உதர பந்தமும், இடையில் சிம்ம முகக்கச்சையும், காலில் பாத சரமும், சலங்கையும் உற்சவரை அழகு செய்கின்றன.

திருமாலின் வலதுமார்பில் ஸ்ரீவத்சம் உள்ளது. கைகளில் ஏந்தியுள்ள ஆழி, சங்கங்களின் மீது விரிந்த சுவாலைகள் காட்டப்பட்டுள்ளன. சக்கரம் பக்க வாட்டில் திரும்பியுள்ளது.

இச்சிலையின் உருவு அமைதி. நிற்கும் நிலை, முகப் பொலிவு, ஆடை அணிகளின் தன்மை யாவும் கொண்டு இதனைச் சம்புவராயர் காலப் படிமமாகக் கருதலாம். இதன் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டு இதன் உயரம் 57 செ. மீ. தோள் அகலம் 12 செ.மீ. ஆகும்.

## திருமகள்

திருமகளின் இப்படிமம் சதுரமான பீடத்தின் மீதுள்ள தாமரை இருக்கையில் உடலைத் திரிபங்கியாக வளைத்து, இடையை வலப்புறம் ஒடித்து இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் வார்க்கப் பட்டுள்ளது. இடக்கை, தாமரை மலரைப் பிடித் துள்ளது. வலக்கை, தாழ் கையாக லோல முத்திரையில் அமைந்துள்ளது.

கரண்ட மகுடம், சிரச் சக்கரம், பத்ர குண்டலம், மங்கல நாண், பொட்டுமணி, சரப்பளி, மார்புக் கச்சை, இலைக்கருக்கு முகப்புடைய தோள் வளைகாப்பு, சன்னவீரம், இடைக்கச்சை, கால் வங்கிபாதசரம் ஆகிய அணிகள் திருமகளை முடி முதல் அடிவரை அலங்கரிக்கின்றன.

வட்டமான குவிந்த முகமும் கோடிட்ட புருவமும், அருள் சுரக்கும் கண்களும், எள்பூ நாசியும், முறுவலிக்கும் உதடுகளும் கொண்டு இப்படிமம் பொலிவோடு அமைந்து முகத்தில் ஆழ்ந்த அமைதியை வெளிப்படுத்தி நிற்கிறது. முழுதும்

தனமாக வார்க்கப்பட்ட இத்திருமேனி நடுநாட்டுப் படிமக் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

இதன் பீடத்தில் வலப்புறத்தில் மட்டும் திருவாசி பொருத்த, உலோகக் காம்பு இணைக்கப் பட்டுள்ளது. இப்படிமம் சம்புவராயர் கலையை வெளிப்படுத்தி நிற்கிறது. இதன் காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு. இதன் உயரம் 46 செ. மீ தோள் அகலம் 11 செ. மீ. ஆகும்.

### நிலமகள்

இப்படிமம் பழைய உற்சவரான வரதராஜப் பெருமாளின் இடதுபுறம் தனிப்பீடத்தில் காணப் படுகிறது.

தாமரை இருக்கையில் இடது காலை ஊன்றி, வலது காலைச் சற்று முன் வைத்து இடையை இடப்புறமாக ஒடித்துத் திரிபங்கியாக நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது.

இரண்டு கைகளுடன் தோன்றும் நிலமகளின் வலக்கையில், நீலோத்பலம் உள்ளது. இடக்கை, பக்கவாட்டில் நீண்டு லோல முத்திரை காட்டுகிறது.

கரண்ட மகுடம் தலையிலும், சிரச்சக்கரம் பின் தலையிலும், மகரக் குழைகள் காதிலும், பொட்டு மணி உட்கழுத்திலும், மணிவடம் கழுத்திலும், சன்ன வீரம் மார்பிலும், இலைக்கருக்கு முகப்புடைய தோள்வளை மேற் கையிலும், மணிவளை முன்

கையிலும், மேகலை இடையிலும், மடிப்புடைய ஆடை முழங்கால் வரையிலும், குறங்கு செறி தொடை மீதும், வங்கி காலிலும், பாதசரம் பாதங் களிலும் இப் படிமத்தை அழகு செய்கின்றன.

நிலமகள் நிற்கும் நிலையும், கைகளின் பாங்கும், ஆழ்ந்த அமைதியை வெளிப்படுத்தும் முகப் பொலிவும் நேரில் கண்டு இன்புறத்தக்கது. இதன் முன்னழகும் பின்னழகும் காணத்தக்கது. இப்படிமத்தில் மார்க்கச்சை இல்லை. இது சம்புவ ராயர் காலத்தியது. காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு. இதன் உயரம் 46 செ. மீ., அகலம் 11 செ. மீ.

## வெண்ணெய்க் கண்ணன்

இக்கோயிலில் உள்ள வெண்ணெய் ஏந்தி ஆடும் கண்ணனின் அழகிய திருக்கோலம் காணத் தக்கது.

தாமரைப் பீடத்தின் மேல் இடது காலை ஊன்றி, வலது காலைப் பக்க வாட்டில் தூக்கித் தாமரை மலர் மீது கொண்டு நர்த்தனமாடும் நிலையில் வெண்ணெய்க் கண்ணனின் படிமம் வார்க்கப்பட்டுள்ளது.

கண்ணனின் வலக்கை, வெண்ணெய் உருண் டையை ஏந்தியுள்ளது. இடக்கை, பக்க வாட்டில் எறிந்த நிலையில் எழிற்கையாகக் காட்டப் பட்டுள்ளது.

கண்ணனின் தலையைச் சுற்றிலும் சுருண்ட கேசங்கள் அழகு செய்ய உச்சித் தலையில் நேர்த்தியான கொண்டை அலங்கரிக்கிறது.

நேர் வகிடிட்ட தலையில் பூராப்பாளையும் தொய்யகமும் அழகு செய்கின்றன. மேல் செவியில் செவிப்பூக்கள் செருகப்பட்டுள்ளன. காதுகளில் வட்டக் குழைகள் வனப்பூட்டுகின்றன.

நெற்றியில் வட்டமான திலகமும், கழுத்தில் மணிவடமும், மார்பில் புலி நகம் கோத்த வடமும், மலர்ப் பதக்கம் கோத்த இரட்டைவடக் கொத்துச் சரமும் அணி செய்கின்றன.

மேல் வயிற்றில் மணிகள் கோத்த சன்ன வீரமும், ஆடையற்ற இடையைச் சுற்றிலும் சதங்கை கோத்த அரைஞாணும், மணிச்சரமும் அணி செய்கின்றன. இடையைச் சுற்றிலும் ஒலிக்கும் மணிகள் பத்தும், இரண்டு மாங்காய் அணியும் அலங்கரிக்கின்றன.

இளந்தோள்களிலும் முன் கையிலும் மணிகள் கோத்த தோள் வளையும் காப்பும், விரல்களில் உருட்டும், மோதிரமும் கண்ணனை அணி செய்கின்றன.

காலில் மணிகள் கோத்த காப்பும் பாதசரமும் அழகு செய்கின்றன பால பருவத்தை வெளிப்படுத்தும் தள தளப்பான உடல் வாகும், வட்டமான குவிந்த முகமும், அர்த்த பாவத்தை வெளிப்படுத்

தும் இளங்கண்ணனின் முகப் பொலிவும் நேரில் கண்டு இன்புறத் தக்கது.

இப் படிமத்தின் அணிகளும் அங்க அமைப்பும் கொண்டு சோழர் கால முடிவிலும் விஜயநகர காலத் தொடக்கத்திலும் தோற்றுவிக்கப்பட்ட சிலையாகக் கருதலாம். இதன் காலம் கி. பி. 14 ஆம் நூற்றாண்டு. இதன் உயரம் 48 செ. மீ., அகலம் 14 செ. மீ. ஆகும்.

## விஷ்ணு (புதிய உற்சவர்)

இப் படிமம் தாமரை இருக்கை மீது நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. மேற் கைகள் இரண்டும், சக்கரத்தையும் சங்கினையும் பற்றி உள்ளன. கீழ் வலக்கை, அபயகரமாகவும், இடக்கை கதாயுதத்தின் மேல் அமையும் பாவனையிலும் காட்சியளிக்கின்றன.

கீரிட மகுடம், மகர குண்டலம், பூணூல், மணிவடம், சரப்பளி, கேயூரம், கைவளை, பீதாம்பரம், தண்டை, பாதசரம் ஆகிய அணிகள் புதிய திருமாலை அலங்கரிக்கின்றன. இதன் உயரம் 67 செ. மீ., அகலம் 17 செ. மீ.

இப் படிமம் 1905 இல் C. K. N. S. குடும்பத்தாரால் செய்து அளிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீதேவி

இப் படிமம் வலக் கையைத் தாழ் கையாகக் கொண்டு இடக்கையில் தாமரை மலரைக் கொண்டு திரிபங்கத்தில் நின்ற கோலத்தில் வார்க்கப் பட்டுள்ளது.

கரண்ட மகுடம், சிர சக்கரம், ரத்தினப் பட்டம், பத்ர குண்டலம், பதக்கம் கோத்த சரப்பளி, மார்க்கச்சை, கேயூரம், கை வளை, காப்பு, இடக் கச்சை, தண்டை, பாதசரம் ஆகிய அணிகள் புதிய ஸ்ரீதேவியின் உருவை அலங்கரிக்கின்றன.

இது 52 செ. மீ. உயரமும், 11. 5 செ. மீ. அகலமும் உடையது.

## பூதேவி

திருமாலின் அருகில் தனிப் பீடத்தில் இப் படிமம் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது, வலக்கை, அல்லி மலரைப் பிடித்துள்ளது. இடக்கை லோல கரமாக நீண்டுள்ளது.

கரண்ட மகுடம், மகர குண்டலம், மணி வடம், பதக்கம் கோத்த சரப்பளி, மார்க் கச்சை, கேயூரம், கை வளை, காப்பு, இடைக் கச்சை, தண்டை, பாத சரம் ஆகிய அணிகலன்கள் நில மகளை அலங்கரிக் கின்றன.

## வேதவல்லித் தாயார்

தனிக் கோயில் நாச்சியாராய் விளங்கும் வேத வல்லித் தாயாரின் படிமம் செவ்வகப் பீடத்தின் மீதுள்ள, பத்ம பீடத்தில், பத்மாசனத்தில் எழிலுற

வீற்றிருக்கிறது. இதன் மேற் கைகள் இரண்டும், தாமரை மலரைக் கொண்டுள்ளன. கீழ்க் கைகள் இரண்டும் அபயவரதமளித்து அருள்பாலிக்கின்றன

தலையில் கரண்ட மகுடம் அலங்கரிக்க, முடி முதல் அடி வரை பல்வகை அணிகளையும் அலை அலையான ஆடையையும் அணிந்து, மார்பில் கச்சை அணிந்து வனப்போடு காட்சியளிக்கிறது. இப் படிமம் முழுதும் கனமாக வார்க்கப்பட்டுள்ளது. இது கி. பி. 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இதன் உயரம் 47 செ. மீ., அகலம் 10.5 செ. மீ ஆகும்

## இராமர் குழு

இக் கோயிலில் இராமர், இலக்குவன், சீதா பிராட்டி ஆகியோரது படிமக் குழு வழிபாட்டில் உள்ளது. இக் குழுவின் நடுவில் உள்ள இராமபிரான் வில்லும் அம்பும் ஏந்தும் பாவனையில் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார்.

இவ் வுருவம் 16 செ. மீ. உயரமும், 4. 5. செ. மீ. அகலமும் உடையது.

## இலக்குவன்

இராமனின் வலது பக்கத்தில் வில்லையும் அம்பையும் ஏந்தும் பாவனையில் இலக்குவனின் நின்ற கோலம் வார்க்கப்பட்டுள்ளது.

வலது பின் தோளில் அம்புகள் தாங்கும் அம்பறாத் தூணியைக் காணலாம். மகுடம், சிரசக்கரம், மகரக் குழை, பதக்கம், தொங்கு வடம், தோள்வளை, கழல் ஆகிய அணிகள் இலக்குவனை அலங்கரிக்கின்றன. இவ் வுருவம் 14.5. செ. மீ. உயரமும், 4. செ மீ. அகலமும் உடையது.

**சீதா பிராட்டி**

இராமனின் இடப் புறத்தில் சீதா பிராட்டியின் நின்ற கோலப் படிமம் எழிலாக வார்க்கப் பட்டுள்ளது. சீதையின் வலக்கரம் தாமரை மொட்டினைப் பற்றியும், இடக்கை தாழ் கையாகவும் உள்ளன.

சீதைக்கு, பாதம் முதல் முடி வரை பாதசரம், இடைக் கச்சை, மேகலை, மார்க்கச்சை, தோள் வளை, கை வளை, பத்ர குண்டலம், மகுடம் ஆகிய அணிகள் அணி செய்கின்றன.

இதன் உயரம் 14.5. செ.மீ, அகலம் 4. செ. மீ. இப் படிமக் குழு 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. வளவனூர் பொன்னம்மாள் குடும்பத்தில் வழிபாட்டில் இருந்த இச் சிலைகள் இக் கோயிலுக்குத் தானமாக அளிக்கப்பட்டுள்ளன.

**ஆண்டாள்**

சூடிக் கொடுத்த நாச்சியாரான ஆண்டாளின் படிமம் இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் வார்க்கப்பட்டுள்ளது.

ஆண்டாளின் வலக்கை அல்லி மலரைப் பிடித்து உள்ளது இடக்கை, தொங்கும் கரமாக, லோல முத்திரையில் நீண்டுள்ளது. தலையில் கொண்டை அலங்கரிக்கிறது. ஆண்டாளின் முடி முதல் அடி வரை கொண்டை, செவிப்பூ, மகர குண்டலங்கள், மணி வடம், சவடி, தோள் வளை, கை வளை, காப்பு. இடைக் கச்சை; தண்டை ஆகிய அணிகலன் கள் அலங்கரிக்கின்றன.

பெருத்த உடல்வாகும், அங்கங்களும் கொண்டு பளுவான ஆடை தரித்து விளங்கும் இப் படிமம் இந் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தியது. வளவ னூர் C. K. N. S. குடும்பத்தினரால் 1905-ல் செய்து அளிக்கப்பட்டுள்ளது.

இதன் உயரம் 65செ. மீ.; அகலம் 11. 5 செ.மீ.

**விகனாச ஆச்சாரியார்**

இப் படிமம் உயர்ந்த பீடத்தின் மீது நான்கு கைகளுடன் அமர்ந்தகோலத்தில் காட்சியளிக்கிறது. மேற் கைகள் இரண்டும் சக்கரத்தையும் சங்கினை யும் கொண்டுள்ளன. கீழ் வலக் கை அபய முத்திரை யிலும், வலக்கை வரத முத்திரையிலும் அமைந் துள்ளன. கீரிட மகுடம். மகர குண்டலங்கள், மணி வடம், சரப்பளி, உதர பந்தம், தோள் வளை. இடைக் கச்சை யாவும் இப் படிமத்தை அலங்கரிக் கின்றன,

இதன் பீடத்தில் இதன் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது. இப் படிமம் கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இக் கோயிலில் பூசை விழாக்களில் வைகுண்ட ஏகாதசி, சிறப்பு வாய்ந்தது. திரளான பொதுமக்கள் இதில் பங்கு கொள்கின்றனர். இக் கோயிலில் தற்போது திரு ந. கிருஷ்ணமூர்த்தி பட்டாச்சாரியார் க. தங்கம்மாள் ஆகிய இருவரும் பரம்பரை அறங் காவலராக இருந்து வருகின்றனர். இவ் வழியினரே கோயிலுக்கு நித்தம்இரு வேளைப் பூசை வைகானச முறைப்படி நடத்தி வருகின்றனர்.

இக் கோயில் நமது இந்து சமய அற நிலைய ஆட்சித்துறையின் கீழ் இருந்து வருகின்றது.

**மூலமடை அய்யனார் கோயில்**

வளவனூர்க்குரிய அய்யனார் இருக்கை ஊரின் தெற்கு எல்லையில் ஏரிக்கரைக்குத் தென்புறத்தில் ஆலமரத்தடியில் அமைந்து உள்ளது.

மூலமடை அய்யனார் என்ற பெயரில் வழங் கப்படுகிறது. இதற்கென்று கட்டட அமைப்பு இல்லை.

மழை இல்லாத வறண்ட காலங்களில் அய்ய னாருக்கு அபிஷேகம் (சிறப்பு வழிபாடு) செய்தால் மழை பெய்யும் என்று ஊரார் நம்புகின்றனர்.

வளவனூர், தாதம் பாளையம், சாலையாம் பாளையம், ஐப்பசிப் பாளையம் ஆகிய ஊர் மக்களும் இந்த அய்யனாரைச் சிறப்பு தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். இக் கோயிலுக்குரிய உற்சவச் சிலைகள் வளவனூர்ச் சிவன் கோயிலில் உள்ளன. இவை செஞ்சிநாயக்கர் காலத்தவை.

★



## நூலாசிரியை திருமதி லட்சுமிமூர்த்தி, பி.ஏ.,

அன்னை : எத்திராஜம்மாள்

தந்தை : ஆர். ஆர். சீனிவாசன்

பிறந்த ஊர் : மயிலாடுதுறை

பிறந்த நாள் : 16. 1. 1951

பெரிய அன்னை திருமதி தனம்மாள் சுப்பிரமணியம் அவர்களால் வளர்க்கப்பெற்று சென்னை திருவல்லிக்கேணி தேசிய பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்றார். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலைப்பட்டம் பெற்றார் தொல்பொருள் ஆய்வுத்துறை அறிஞர் மா. சந்திரமூர்த்தி எம். ஏ. அவர்களை மணந்தார். முத்தான மூன்று பிள்ளைகளின் தாயான இவர், சத்தான இவ் வரலாற்று நூலைத் தந்துள்ளார்.

கணவருக்குத் துணைநிற்கும் அனுபவத்தை இந் நூலில் காணலாம்.